விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 16 செவ்வாய்க்கிழமை (29.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 131

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்கக்கோரி தீர்மானம்

## வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திலிருந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரி வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணையினை வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் சி. சிவமோகன் முன்மொழிய, உறுப்பினர் ரவீகரன் அதனை வழிமொழிந்து சபையினரின் சிறு திருத்தங்களுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 8 ஆவது அமர்வு நேற்று கைதடியிலுள்ள பேரவைக்கட்டடத்தில் மு.ப. 9.40 மணியளவில் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் ஆரம்பமானது. இதன்போதே குறித்த பிரேரனை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அப்பிரேரணையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை வாழ் மக்களின் அமைதி வாழ்வைக் கருத்தில் கொண்டு இரத்துச் செய்யும்படி இலங்கை பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சி தலைவர்களினையும் எதிர்க் கட்சித் தலைவர்களினையும் இச் சபை கோருகின்றது என அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

மேலும் இச்சட்டமானது சிறுபான்மை இனங்களினை அடக்கி ஒடுக்குவதற்கே பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கும் ஏதோ ஒரு காரணங்கள் கூறப்பட்டு அவர்களும் இத்தடைச்

20 ஆம் பக்கம் பார்க்க....

## யாழ். மாநகரசபை எதிர்வரும் ஆகஸ்டில் கலைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கலைக்கப்படவுள்ளதாக ஈபிடிபி கட்சியின், செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தற்காலிக தொழிலாளர்களாக கடமையாற்றிய 87 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் கலைக்கப்பட்டாலும், அடுத்த ஆட்சி வரும் வரையில் மாநகர சபை செயற்படும். உங்கள்

தொழிலுக்கும் தொழில்

20 ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளுக்கு எதிராகப் போராடியவர் இந்திய இராணுவத் தளபதியானார்?

(கொழும்பு)

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினர் நிலைகொண்டிருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் பவான் படை நடவடிக்கையில் தளபதியாக பங்கேற்றிருந்த லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுகக் இந்தியாவின் அடுத்த படைத்தளபதியாக நியமிக்கப்படவுள்ளார்.

இந்தியாவின் அடுத்த படைத்தளபதியாக லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுகக்கை அடுத்து நியமிப்பதற்கு இந்திய படைத்துறை அமைச்சு அந்நாட்டின் நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவிடம் பரிந்துரைத்துள்ளது.

இதையடுத்து, இந்தியாவில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு அவரை இந்தியாவின் அடுத்த படைத்தளபதியாக இவ்வாரம் நியமிக்கவுள்ளது.

இந்நிலையில், லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுகக் இந்தியாவின் அடுத்த படைத்தளபதியாக நியமிக்கப்படுவதற்கு் பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவரும், முன்னாள் இந்திய படைத் தளபதியுமான ஜெனரல் வி.கே.சிங் எதிர்ப்பு

20 ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்ப்பாணத்தில் ஓய்வு விடுதி?

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நக்ர அபிவிருத்தி அதிகார சபை யாழ்ப்பாணத்தில் 38 அறைகளைக் கொண்ட ஓய்வு விடுதி ஒன்றை அமைக்கவுள்ளது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த திட்டத்தை

20 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி கேட்டதன் பேரிலேயே இலங்கைக்கு உதவி

- தென்னாபிரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவைக் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே சமாதானத்துக்காக இலங்கைக்கு உதவ தென்னாபிரிக்கா முன்வந்ததாக இலங்கை விவகாரத்தைக் கையாளும் விசேட பிரதிநிதி சிறில் ராமபோசா தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதத்தில் நடைபெறவிருக்கும் தென்னாபிரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது ஜேக்கப் சூமாவின் உதவி ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டிருப்ப

19 ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை முதலமைச்சர் சந்திக்க வேண்டும்

எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அழைப்பினை ஏற்று வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புக்களை மத்திய அரசிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு தனது கன்னி உரையின்போது முதலமைசசருக்கு அறிவுரை வழங்கினார் வடக்கு மாகாணசபையின் எதிர்க் கட்சித்தலைவர் எஸ்.தவராசா.

வடக்கு மாகாண சபையின் 8 ஆவது அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிவரை கைதடியிலுள்ள மாகாணசபையின் பேரவைச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் எதிர்க்கட்சி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள தவராசா தனது கன்னியுரை

20 ஆம் பக்கம் பார்க்க....

## நெடியவன் தலைமறைவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டவர் எனக் கூறப்படும் பேரின்பநாயகம் சிவபரனை (நெடியவன்) கைது செய்வதற்கான சிவப்பு அறிவித்தல், சர்வதேச பொலிஸாரினால் வெளியிடப்பட்டதை அடுத்து நோர்வேயில் அவர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் இடங்களிலிருந்து தலைமறைவாகியுள்ளார் என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

20 ஆம் பக்கம் பார்க்க....

## பொது நிகழ்வுகளின் போது இராணுவத்தை அழைக்க வேண்டாம்

எதிர்க்கட்சி உறுப்பினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாணத்தில் இடம்பெறுகின்ற பொது நிகழ்வுகளில் இராணுவத்தினரை விருந்தாளிகளாக அழைக்க வேண்டாமென வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சி உறுப்பினர் நிஃப்கான் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெறுகின்ற பொது நிகழ்வுகள் மற்றும் பாடசாலை நிகழ்வுகளில் இராணுவத்தினர் விருந்தாளியாக அழைக்கப்படுவதனால் சிங்கள மொழியிலேயே தேசிய கீதம இசைக்கப்படுகின்றது என ஆளுங் கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்துக்களினை முன்வைத்திருந்தனர்.

இதனால வடக்கு மாகாணத்திலும் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுவதாக ஆளுங்கட்சினர் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதன் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க் கட்சி உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொர்து நிகழ்வுகளில் ஏன் இராணுவத்தினரை விருந்தாளிகளாக அழைக்கின்றீர்கள்? அவர்களினை அழைக்காமல் விடுங்கள்.

இராணுவம் தம்மை விருந்தாளிகளாக அழைக்குமாறு அச் சுறுத்தினால் பயப்படாதீர்கள். அவர்களினை வெளியேற்றுங்கள் என அவர் தெரிவித்தார். (எ-4)

## தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட வேண்டும்

முதலமைச்சர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற அரச நிகழ்வுகள் உட்பட அனைத்து நிகழ்வுகளிலும் முதலில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படல் வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான க.வி. விக்னேஸ்வரன் சுற்றுநிருபம் அனுப்பவுள்ளதாக அவ்வத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தில் சிங்களம், தமிழ் மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படல் வேண்டுமென குறிப்பிட்டு உள்ளபோதிலும் வட பகுதியில் இராணுவ தலையீடுகளினால் சிங்கள மொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது என ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து இலங்கையின் எப்பாகத்திலும் தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்பட

20 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 வருடங்களின் பின் ஒளி பெறும் ஊரதீவு கிராமம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் ஊரதீவு மற்றும் மடத்துவெளி கிராமங்களுக்கு சுமார் 25 வருடங்களின் பின்னர் இன்று மின்சாரம் வழங்கப்படுகிறது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு இன்று மாலை 5 மணிக்கு உத்தியோகபூர்வமாக மின்விநியோகம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைக்கிறார்.

இந்நிகழ்வில் விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்ரின் அலஸ்ரின், வேலணை பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி, வேலணை பிரதேசசபைத் தவிசாளர் சி.சிவராசா, இலங்கை மின்சாரசபையின் வடக்கின் வசந்தம் திட்ட மின்பொறியியலாளர் கோசல ஜெயதிலக, வடக்கின் வசந்தம் மின்திட்டத்தின் உதவித் திட்ட முகாமையாளர் ரி.குணசீலன், யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் எஸ்.ஞானேஸ்வரன், வேலணை பிரதேச மின் அத்தியட்சகர் அருள்நாதன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (எ)

# மாகாணசபை உறுப்பினர்களுக்கு 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## முதலமைச்சர் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான நிதி தலா 40 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் யாழ்.பொதுநூலக வளாகத்திலுள்ள மாகாண அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற நிதி சம்பந்தமான கலந்துரையாடலையடுத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபை உறுப்பினர்களுக்கு 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்குவது என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும் இந்த நிதி போதாது என்று உறுப்பினர்களினால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து 25 இலட்சமாக உயர்த்தப்பட்டது. இந்நிலையில் 25 இலட்சம் ரூபா நிதியும் போதாது என்று உறுப்பினர்களினால் வலியுறுத்தப்பட்டதால் 40 இலட்சம் ரூபா நிதியை ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# மீன்பிடியியல் பட்டதாரிகள் மாகாணசபை முன் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா பட்டதாரிகள் தமக்கான வேலைவாய்ப்பை வழங்கக் கோரி வடக்கு மாகாண சபைக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணி முதல் 10 மணிவரை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணசபையின் 8 ஆவது அமர்வு நேற்றுக் காலை கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையின் பேரவைச்செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வு ஆரம்பிக்க முன்பாகவே பேரவைச்செயலகம் முன்பாக ஒன்றுகூடிய பட்டதாரிகள் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் தமது கோரிக்கை கடிதத்தை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் பேரவைச்செயலகத்தில் வைத்து கையளித்தனர். இதனையடுத்து அங்கிருந்து கலைந்து சென்றனர். (எ-6)

# வடக்கில் இராணுவ ஆட்சி; நீக்கக் கோருகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறும் இராணுவ ஆட்சியை நீக்கி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதோடு, படையினரை முகாமுக்குள் முடக்கவேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கிலிருந்து படையினரை வெளியேற்ற முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தமை குறித்து கருத்து வெளியிட்ட போதே ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர விஜித ஹேரத் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

வடக்கில் சிவில் நிர்வாகத்தில் படையினரின் தலையீடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் அந்த மக்கள் அன்றாடம் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். எனவே, இதற்கு அரசு ஒரு முடிவு காண வேண்டும். சிவில நிர்வாகத்தில் இடம்பெறுகின்ற இராணுவத் தலையீட்டை நீக்கி, படையினரை முழுமையாக முகாமுக்குள் முடக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (எ-11)

# நல்லூர் ப.நோ.கூ.சங்கத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் நேற்று முன்தினம் 27-ந் திகதி சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலாளர் ப.செந்தில்நந்தனன் தலைமையில நடந்த இக் கூட்டத்தில் புதிய நெறியாளர் குழு தெரிவு செய்யப் பட்டது.

சங்கத்தின் தலைவராக பெ.கனகசபாபதி, உப தலைவராக சி.பத்மராஜா மற்றும் ஐந்து பேர் கொண்ட நெறியாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

பலத்த போட்டிகளின் மத்தியில் வாக்களிப்பு மூலம் நடந்த இத் தெரிவானது ஆறு வருடங்களுக்குப்பின்னர் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.அருந்தவநாதன் தலைமையில் சங்கத்தேர்தல் நடைபெற்றது. (ந)

# இரணைமடு குளத்திலிருந்து யாழிற்கு குடிநீர் விநியோகம்

## மாகாணசபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் குடிநீர் விநியோகிக்கும் திட்டம் தொடர்பான பிரேரணை மாகாணசபையின அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப்பிரேரணையை விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன முன்மொழிந்திருந்தார். இதனை ஆளும்கட்சி உறுப்பினர் இ.ஆனோல்ட வழிமொழிய சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


இத்தீர்மானத்தை வழிமொழிந்து உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் எடுத்து வரும் திட்டம், இரணைமடுக் குளத்தை நம்பி மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கையைக் கடுமையாகப் பாதிக்கும் என கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் தீவிரமாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இது வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து அவர் இத்திட்டம் தொடர்பாக ஆராய்ந்து தனக்கு அறிக்கையிடுவதற்கு பல்நோக்கு ஆய்வுக்குழு ஒன்றை நியமித்திருந்தார். பொருளியலாளர்கள், பொறியியலாளர்கள், சூழலியலாளர்கள், நீரியல் ஆய்வாளர்கள், மருத்துவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பல தரப்பினரையும் உள்ளடக்கிய இந்த ஆய்வுக் குழுவினர் சமர்ப்பித்த அறிக்கையையும் இதர பல விடயங்களையும் கவனமாகப் பரிசீலித்த முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவை இத்திட்டம் தொடர்பான தீர்மானம் ஒன்றை எடுத்து, அதனை இத்திட்டத்துக்கு நிதி உதவி வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் சமர்ப்பித்திருக்கிறது. அமைச்சரவையின இந்த முடிவை இந்த உயரிய சபையின் முன்னால் பிரேரணையாகச்சமர்ப்பிக்க விரும்புகிறேன் என்றார். (எ-6)

# மரண அறிவித்தல்

## Dr.கணபதிப்பிள்ளை பத்மநாதன்



கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் மயிலணி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.கணபதிப்பிள்ளை பத்மநாதன் 26.04.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகனும், விமலேஸ்வரியின் அன்புக் கணவரும், நிரஞ்ஜனன் (கனடா), Dr.சுசித்திரா (அவுஸ்திரேலியா), நிமலன் (அமெரிக்கா), தர்ஷினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜானகி (கனடா), சத்தியகீர்த்தி (அவுஸ்திரேலியா), யோகசுந்தரி (அமெரிக்கா), அரிதரன் (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும், அர்ஜின், அஸ்வின், ஸ்ரீரஞ்ஜனி, ஸ்ரீராஜ், காருண்யா, தியானா, அக்ஷயன், அனுஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் மகேஸ்வரலிங்கம், சர்வேஸ்வரலிங்கம், கஜமுகலிங்கம், உருத்திரலிங்கம், இந்திரலிங்கம், காலஞ்சென்ற சிவனேஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.04.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"விமலஸ்தான்" தகவல் : விமலேஸ்வரி (மனைவி),
மயிலணி, பிள்ளைகள்.
சுன்னாகம். (6251) 021 224 0395

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7203)

# மர்மப் பொருள் வெடித்து குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட கிளாலிப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை காணி துப்புரவு செய்துகொண்டிருந்தபோது மர்மப் பொருள் ஒன்று வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். படுகாயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த 40 வயதுடைய எஸ்.தவரட்ணம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

ஏற்கெனவே முகமாலை முன்னரங்கப்பகுதியில கண்ணி வெடியகற்றல் பணியில ஈடுபட்ட பணியாளர ஒருவர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பைச் சேர்ந்த எம்.விசி என்பவரது வாகன வரிப் பத்திரம் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (எ)

# ஜனாதிபதியின் பதாகை எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கின் அருகில் ஜனாதிபதினை வரவேற்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த பதாகை இனந்தெரியாதோரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் யாழ். விஜயத்தை முன்னிட்டு அவரை வரவேற்கும் வகையில் யாழ் நகர் உள்ளிட்ட பல இடங்களிலும் அவருடைய பதாகைகள் அமைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் துரையப்பா விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டிருந்த பதாகையே நேற்று முன்தினம் இரவு எரிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று கடந்த சில மாதங்களிற்கு முன்னர் யாழ் சென் சாள்ஸ் மகா வித்தியாலயத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த பதாகையும் இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உடனடியாக இராணுவத்தினரால் அந்தப் பதாகை அகற்றப் பட்டிருந்தது.

அதே போன்றே நேற்று முன்தினம் இரவு எரிக்கப்பட்ட இந்தப் பதாகையும் நேற்று அதிகாலையிலேயே இராணுவத்தினரால் அகற்றப்பட்டிருக்கின்றது. (எ-6)

## வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:

021 321 0815,
021 567 1532

## ஆட்கள் தேவை

01. சிட்டை எழுதுனர் தேவை.
(18 - 25 வயது)
02. லொத்தர் விற்பனையாளர் தேவை.
(சுன்னாகம் பிரதேசம்)
03. நடமாடும் லொத்தர் விற்பனையாளர்.
(துவிச்சக்கர வண்டி)

தொடர்புக்கு:-
0779116108, 0212217187

(6252)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இராணுவத்தினர் காணிகளை கையகப்படுத்துவதை நிறுத்த வேண்டும்



## அமைச்சர் வாசுதேவ வலியுறுத்து

**சிங்கள அடிப்படைவாதிகளின் சிறைக்கைதியாகியுள்ள அரசாங்கம் வட மாகாண சபைக்கான அதிகாரங்களை வழங்காது அடிமைப்படுத்தி வைத்துள்ளது எனக்குற்றம்சாட்டும் அரசின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார வடக்கில் படையினர் வகைதொகையின்றி காணிகளை கையகப்படுத்துவது கைவிடப்படவேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அமைச்சர்மேலும் தெரிவிக்கையில், வடமாகாண சபை தேர்தல் மட்டுமே நடத்தப்பட்டுள்ளதே தவிர அச்சபை இயங்குவதற்கான எந்த அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை.

வட மாகாண சபை செயலாளர் நியமிப்பில் முதலமைச்சருடன் எந்தவித பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவில்லை. தீர்மானம் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் தனனிச்சையாகவே அந்த நியமனத்தை வழங்கியது.

அதேபோன்று வட மாகாணத்திற்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நியமனத்திலும் இவ்வாறான செயற்பாடே இடம்பெற்றது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் மேற்கண்ட பதவிகள் தொடர்பில் மாகாண சபை முதலமைச்சருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாடு கண்ட பின்னரே அப்பதவிகள் நியமிக்கப்பட வேண்டுமென தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் இந்த வழிமுறைகள்எதனையும்பின் பற்றாமலேயே செயற்பட்டுள்ளது.

தெற்கின் சிங்கள அடிப்படைவாதச் சக்திகளின் சிறைக்கைதியாக அரசாங்கம் மாறியுள்ளது.

இச் சக்திகளின் ஆலோசனைகளுக்கமைய வட மாகாண சபையை அடிமைப்படுத்தி அதற்கு கட்டளையிடும் அதிகாரியின் தோரணையிலேயே அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

வட மாகாண சபையை கலைக்க வேண்டுமென்ற சிங்கள அடிப்படைவாதிகளின் அபிலாஷையை பூர்த்தி செய்யும் விதத்திலேயே அனைத்தும் இடம்பெறுகின்றன.

வட மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பல முறை வலியுறுத்தியுள்ளோம்.

ஆனால் எதுவுமே சாத்தியப்படுவதாக இல்லை. எமது முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

இந்நிலை தொடர்வது எமது நாட்டுக்கு நல்லதல்ல. ஏனென்றால் புலம் பெயர்ந்து வாழும் தமிழர் அமைப்புக்கள் தாம் வாழும் நாடுகளின் அரசாங்கங்களிடமும் ஐ.நா. உட்பட சர்வதேச அமைப்புக்களிடமும இலங்கை அரசாங்கம் வட மாகாண சபை தேர்தலை மட்டுமே நடத்தி உலகை ஏமாற் றியதே தவிர மாகாண சபைக்கான அதிகாரங்களை வழங்கவில்லை பட்டியலிட்டு குற்றச்சாட்டுக்களை சமர்ப்பிக்கும். அவ்வாறான தொரு சூழ்நிலையில்எமக்கெதிராக என்னென்ன குற்றச்சாட்டுகளை சுமத்த முடியுமென வழிதேடிக் கொண்டிருக்கும் வெளிநாடுகளுக்கு சாதகமாக அமைந்து விடும்.

இது நமக்கு நாமே குழி தோண்டிக்கொள்ளும் நிலைமைக்கு ஒப்பானதாகும்.

வட மாகாண ஆளுநராக இராணுவத்தை சேர்ந்த ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார். இவரை வெளியேற்றி சிவிலியன் ஒருவரை நியமிக்க வேண்டும். அதனை தொடர்ந்து வலியுறுத்துகின்றோம். ஆனால் இன்னமும் சாத்தியப்படவில்லை.

பாதுகாப்புக்கெனக் கூறிக் கொண்டு வட மாகாணத்தில் இராணுவத்தினர் வகை தொகையின்றி காணிகளை கையகப்படுத்துவது கைவிடப்பட வேண்டும்.

அத்தோடு மக்களின் காணிகளை கையகப்படுத்துவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. தேசிய பாதுகாப்புக்கென காணிகள் அடையாளம் காணப்படும் போது அது தொடர்பாக வட மாகாண சபையுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாடு காண வேண்டும்.

அது மட்டுமல்லாது பெருமளவு ஏக்கர் கணக்கில் காணிகளை கையகப்படுத்துவதை கைவிட்டு அதற்கான ஒரு வரையறையை வகுத்துக் கொள்ள வேண்டும். எல்லைகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

அரசாங்கம் வட மாகாண சபையோடு இணக்கப்பாடோடு செயற்பட்டு அதிகாரங்களை வழங்கி தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளும் திட்டங்களை முன்னகர்த்த வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு வர வேண்டும். அதன் மூலமே தீர்வுகளை எட்ட முடியும்.

தற்போது தென்னாபிரிக்கா மத்தியஸ்தம் வகிக்க முன் வந்துள்ளதால் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை வட மாகாண சபை மேற்கொள்ளும் நிலைமையும் காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

# பாலியல் கொடுமைகள் சாதாரண விடயமல்ல

## சுமந்திரன் எம்.பி. கூறுகின்றார்

யுத்த குற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் சுயாதீன விசாரணைகளை நடத்த ஒத்துழைக்காவிடின் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். போரின் போது பாலியல் கொடுமைகளை ஆயுதமாகப் பயன்படுத்தியமை சாதாரண விடயமல்ல என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கில் தொடர்ந்தும் இராணுவ முகாம்களை வைத்திருப்பது ஜனநாயக செயல் அல்ல. இராணுவத்தை வெளியேற்ற அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

போரின் போது இராணுவம் பாலியல் வல்லுறவை ஆயுதமாக பயன்படுத்தியுள்ளமையென ஐ.நா. தெரிவித்துள்ள அறிக்கை தொடர்பில் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், யுத்தத்தின் போது இராணுவத்தினர் தமிழ் பெண்கள் மீது பாலியல் கொடுமைகளையும் செய்தனர் என்ற குற்றஞ்சாட்டு 2009 ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவடைந்த காலத்திலேயே முன்வைக்கப்பட்டது.

இதனை அரசாங்கம் விசாரணைகளுக்கு உட்படுத்தி நியாயமான தீர்வொன்றினையும் காண்பதாக நம்பிக்கையளித்தும் இன்று ஐந்து ஆண்டுகளாகியும் அவை தொடர்பில் கவனத்திற் கொள்ளவில்லை. ஐ.நா. செயலாளர் நாயகம வெளியிட்டுள்ள அறிக்கையானது வெறுமனே இலங்கையை மாத்திரம் சுட்டிக் காட்டியதல்ல. இலங்கை உட்பட 21 நாடுகள் இப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே, பாலியல் வல்லுறவை ஆயுதமாக பயன்படுத்தி பெண்களை சீரழித்தமையினை சாதாரணதொரு சம்பவமாகக் கொள்ள முடியாது. இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் இப்போது எக்காரணங்களை குறிப்பிட்டாலும் அதை எவரும் நம்பப் போவதில்லை என்றார். (2)

# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதி.சபையில் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன

(யாழ்ப்பாணம்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பொதுமுகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர், முகாமையாளர் (நிர்வாகமும் மனித வளமும்), முகாமையாளர் (திட்டமிடலும் தகவலும்), சபைச் செயலாளர், திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் அலுவலர், ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர், மொழி பெயர்ப்பாளர், சைபர் அவதானிப்பு உதவியாளர், பிரதேச சிறுவர் பாதுகாப்ப அலுவலர் (வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்கள் தவிர்ந்த), செய்தியாளர் ஆகிய வெற்றிடங்கள் நிலவுகின்றன.

மேற்படி பதவிகளுக்கு தலா ஒவ்வொரு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

அத்துடன் உதவி ஆலோசகர் பதவிக்கு தலா 2 வெற்றிடங்கள் நிலவுகின்றன. விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மேமாதம் 11 ஆம் திகதி முன்னாள் தலைவர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, 330, தலபத்துகொட வீதி மாதிவெல, ஸ்ரீஜெயவர்த்தனபுர என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (அ)

# இன்றைய இராசி பலன்

29.04.2014

(சித்திரை 16, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 12.04 மணிவரை
அச்சுவினி முற்பகல் 9.29 மணிவரை
இராகுகாலம் 2.58-4.28 மணிவரை
சுபநேரம் 10.28-11.58 மணிவரை
சிவதொண்டர் குருபூசை,
சித்திரைப் பரணி, அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்:** அம்பிகையை வழிபட்டு இன்பம் காண வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், சஞ்சலங்கள் கூடும், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**கடகம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், நல்ல தகவல்கள் வந்து சேரலாம், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** பழைய கடனை அடைக்கும் எண்ணம் மேலோங்கும், தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு பிடிக்கலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், வாகன பழுதுச் செலவுகள் உருவாகும்.

**துலாம்:** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், வெளியூர் பயணத்தால் ஆதாயம் ஏற்படும், காரிய அனுகூலமுண்டு, அபூர்வ சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** பிள்ளைகள் தொடர்பில் செலவுகள் ஏற்படலாம், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், அதிஷ்ட வாய்ப்புக்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பெற்றோரின் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும் வாய்ப்புண்டு, பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், வாக்கு மேன்மையுண்டு, திருமணப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார்சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் ஒருவர் கோமாநிலையில்

(மானிப்பாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதால் ஒருவர் படுகாயமடைந்து கோமா நிலையில் உள்ளதாக இளவாலைப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் யாழ்.இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரிக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் ந.சதீஸ்கரன் (வயது27) என்ற இளவாலை கால்பந்தாட்ட விளையாட்டு வீரரே கோமா நிலையில் உள்ளார்.

மேற்படி நபர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.


இந்நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகளை இளவாலை கால்பந்தாட்ட அணிகள் மேற்கொண்டு வருகின்றனர். (2-23)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் சித்திரை மாத வெளியீடாகஞானச்சுடர் வெளிவந்துள்ளது.

இந்நூலில் வட இந்தியத் தலயாத் திரையின் தொடர்ச்சி, ஸ்ரீரமண நினைவலைகள் தொகுப்பு மற்றும் கா.கைலாச நாதக் குருக்கள் எழுதும் சைவத் திருக்கோயிற் கிரியை நெறி அண்மையில் சிவபதமெய்திய சிவ சண்முக வடிவேலின் திருநாவுக்கரசு நாயனாரைப் பற்றிய கட்டுரையோடு இன்னும் பல கட்டுரைகள், சிறுகதைகள், சைவ வினாவிடை, புகைப்படத் தொகுப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (2)




## மணவாளக்கோலவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத் திலமைந்துள்ள அருள்ஞான மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய மணவாளக் கோலவிழா நாளை காலை 8 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் லிங்கேஸ்வரப் பெருமானுக்கு 1008 சங் காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு விசேட பூஜையும் நண்பகல் 12 மணிக்கு எம்பெருமான் உள்வீதி,வெளிவீதி உலாவருகை தந்து அருள்பாலிப்பார்.

அன்றைய தினம் வ.ஆறுமுக நாதன் தலைமையில் சைவ ஐக்கிய சங்க உறுப்பினர்கள், திருமதி.வசந்தி தலைமையில் வாலாம்பிகை அம்மன் பஜனைக் குழுவினர், திருமதி.சி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய பஜனைக் குழுவினர்கள் இணைந்து வழங்கும் பஜனைகள் இடம் பெறவுள்ளன. (2)

# ரவிகரனின் மூன்று பிரேரணைகள் முன்மொழியப்பட்டு நிறைவேற்றம்

## வடமாகாணசபை நேற்றைய அமர்வில்

(யாழ்ப்பாணம்)

கடும் இராணுவ அழுத்தங்களுடன் நடைபெறும் இராணுவ சேர்ப்பு தொடர்பிலான பிரேரணை உட்பட மூன்று பிரேரணைகள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனால் முன்மொழியப்பட்டு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

வடமாகாணசபையின் எட்டாவது அமர்வு நேற்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகியது. இந்நிலையில் முன்னர் நீக்கப்பட்டு இறுதியில் சில மாற்றங்களுடன் சேர்க்கப்பட்ட பிரேரணையாகிய "கடும் இராணுவ அழுத்தங்களுடன் நடைபெறும் இராணுவ சேர்ப்பு தொடர்பிலான பிரேரணை உட்பட மூன்று பிரேரணைகள் வடமாகாண்சபை உறுப்பினர் ரவிகரனால் முன்மொழியப்பட்டு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

இது தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

ரவிகரனால் குறிப்பிடப்பட்ட 3 பிரேரணைகளில் இரண்டு பிரேரணைகள் ஏற்கனவே அவைத்தலைவரால் அனுமதிக்கப்பட்ட நிலையில் மூன்றாவது பிரேரணையாகிய இராணுவ சேர்ப்பு தொடர்பிலான கண்டனப்பிரேரணை முன்னர் நீக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் ரவிகரனால் முன்வைக்கப்பட்ட வாதங்களின் பின்னர் சில திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் முன்மொழிவுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தது.

அப்பிரேரணையின் முழுவடிவம் பின்வருமாறு,

எமது மக்களின் வாழ்வாதாரம் நசுக்கப்பட்டு இருக்கிற நிலையில் ஓரளவேனும் தமது இன்னல்களுக்காக குரல் கொடுப்பவர்களும் குடும்ப வாழ்வாதாரத்தின் அத்திவாரமாக இருப்பவர்களும் தேசத்தின் இளைய சமூகம் தான்.

பல்வேறு வழிகள் மூலமும் அவர்களின் குரல்கள் நசுக்கப்பட்டு நிமிர்ந்து நிற்பவன் இன்று பயங்கரவாதியாக்கப்பட்டு அவனின் குடும்ப வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது.

சொந்த மண்ணில் இருந்து வெளிநாடு செல்லும் தமிழர்களில் பெரும்பான்மையினரின் பின்னணியில் இங்கு நடைபெறும் அடக்குமுறைகளின் தடயங்களே காணப்படுகிறது. இந்நிலையில் அங்கு சென்றும் சிறைப்படுபவர்களின் குடும்ப வாழ்வாதாரம் இன்னும் நலிவடைந்தே செல்லும் நிலை.

இவ்வாறு தமிழின அடக்குமுறைகள் எந்த வடிவத்தில் வருகின்ற போதிலும் அதனை எதிர்த்து நிற்கவேண்டிய தமிழர்களின் பிரதிநிதிகள் நாம் என்பதை இங்குள்ள அனைவரும உணர்ந்து கொள்ள வேண்டும்.

வீடுகளில் சென்று மிரட்டியும் சில பொய்யான தகவல்களை கூறியும் நடைபெறும் இப்படியான கடும் இராணுவ அழுத்தங்களுடன் இடம் பெறும் இராணுவ சேர்ப்பு நடவடிக்கைகள் வன்மையாக கண்டிக்கப்படவேண்டியதொன்று. அழுத்தங்களுக்கு உள்ளாகிற தமிழ் குடும்பங்கள் இத்தகவல்களை வெளியில் யாரிடமாவது முறையிடும் நிலையில் பொய்க்குற்றச்சாட்டுகள் தம்மீது பாய்ந்து தாம் கைது செய்யப்பட்டு விடுவோமோ என்ற கலக்கமும் இன்று ஏராளமான குடும்பங்களின் எண்ணங்களில் தங்கியுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான அடக்கு முறைகளை எதிர்த்து போராட வேண்டிய கடப்பாடு உடைய நாம் இச்சபையின் இது தொடர்பிலான கண்டனத்தை தெரிவித்தலும் அவசியமாகிறது.

இது தொடர்பிலான இங்கு ஏற்றுக்கொள்ளத்தக்க எனது பிரேரணையாக,

இராணுவம் அண்மைக்காலத்தில் முறையற்ற விதத்தில் இளைஞர் யுவதிகள் சம்பந்தமாக (நடத்தப்படும் முறையற்ற செயல்கள்) அவர்களிடையே தொடர்ந்து பீதியை ஏற்படுத்தி உள்ளது.

இத்தகைய செயல்களில் இராணுவம் தொடர்ந்து நடந்து கொள்வதை இச்சபை கண்டிக்கிறது என்பதை துரைராசா ரவிகரன் ஆகிய நான் முன்மொழிகிறேன்.

இது தவிர ரவிகரனால் முன்வைக்கப்பட்ட ஏனைய இரண்டு பிரேரணைகளான,

2009 ஆம் ஆண்டு வரை வன்னியில் வசித்து இறுதிக்கட்ட யுத்தத்தின் பின் சொந்த இடங்களில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் மூலம் 25 ஆயிரம் ரூபாவும் ஏனைய நிறுவனங்களின் பங்களிப்பில் 25 ஆயிரம்ரூபாவும் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்பட்டது.

இதில் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இரண்டாவதாக வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா இன்று வரை வழங்கப்படவில்லை. இதே நேரம் குடாநாட்டில் உள்ள சில பிரதேச செயலகங்கள் அப்பணத்தை வழங்குவதாக பக்களிடம் கையொப்பம் பெற்ற போதும் இன்னமும் பணம் வழங்கப்படவில்லை. எனவே வழங்கப்படாத மிகுதிப்பணத்தை வழங்கவேண்டிய அனைவருக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு மத்திய மீள்குடியேற்ற அமைச்சினை இச்சபை கோருகிறது என்ற பிரேரணையும்,

முள்ளிவாய்க்கால் மீனவர்கள் ஏற்கனவே பாவித்த இறங்கு துறையை அவர்களுக்கு விடுவித்துக்கொடுக்க வேண்டும் எனவும் கொக்கிளாய் தமிழ் மீனவர்களுக்கான இறங்கு துறையை பொருத்தமான இடத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும் பணிப்பாளர் கடற்றொழில் நீரியல் வளத் துறையை இச்சபை கோருகிறது என்ற பிரேரணையும் வடமாகாணசபையின் எட்டாவது அமர்வில் ரவிகரனால் முன்மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (-6)




## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், விளையாட்டரங்க வீதி, அருள் மிகு வீரமாகாளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதன் இறுதித் திருவிழா எதிர் வரும் மே மாதம் முதலாம் திகதி நடைபெறும்.

இவ்வலங்கார உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு சைவத் தமிழ் மக்களும் ஆன்மீகமும் எனும் தலைப்பில் மதுரகவி, காரை எம்.பி.அருளானந்தன் ஆன்மீக உரையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

## கும்பாபிஷேகம்

(கொடிகாமம்)

புராதன வரலாற்று சிறப்புமிக்க தென்மராட்சி வரணி கரம்பைக் குறிச்சி குடியிருப்பு அருள்மிகு காளாமரபை வைரவர் ஆலயத்தின் நூதன பிரதிஷ்டா ஆவர்த்தன திதி பந்தன ஏக குண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் மேமாதம் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

மேற்படி விழாவானது பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ தி.ஞானப்பிரகாசக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது என ஆலய அர்ச்சகர் சிவத்திரு தி.சுதர்சன் அறிவித்துள்ளார். (2-272)

## திருவடி நிலைக் கடலில் வைரவரின் கருங்கற் சிலை



(மானிப்பாய்)

சுழிபுரம் திருவடி நிலைக் கடலில் வைரவரின் கருங்கல் சிலை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சிலையானது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வட்டுபிளவத்தை இளை ஞர்கள் கடலின் சுமார் 250 மீற்றர் தூரத்தில் குளித்து கொண்டிருந்த போது குறித்த சிலையை மீட்டுள்ளனர்.

வேட்டியால் சுற்றப்பட்ட நிலையிலிருந்த இந்தச் சிலை தொடர்பாக பொன்னாலை மற்றும் சுழிபுரம் மேற்கு இளைஞர்களுக்கு அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து அங்குசென்ற இளைஞர்கள் குறித்த சிலையை சம்பில் துறை சம்புநாத ஈஸ்வரத்துக்கு எடுத்துச் சென்று அங்குள்ள நரசிங்க சித்தர் சுவாமிகளின் பூசை வழிபாடுகளுடன் அந்த ஆலயத்தில் வைத்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டிலிருந்து இந்துக் கடவுளர்களின் விக்கிரகங்கள் திருடப்பட்டு வருகின்ற நிலையில் கடலில் இருந்து மேற்படி விக்கிரகம் மீட்கப்பட்டுள்ளது. (2-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையற்றவர்களின் பின்னால் சென்றால் எமது சந்ததியினரின் இருப்பு கேள்விக்குறியாகும்

## பிரதியமைச்சர் முரளிதரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களை உசுப்பேற்றிவிட்டு உணர்வாக கதைப்பவர்கள் மட்டுமே. அவர்களினால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லையென மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இங்கு கருத்து தெரிவித்த பிரதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் கடந்த 30 வருடகால யுத்தத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்டவர்கள். எங்களை கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. நாங்கள் எதிர்ப்பு அரசியலை செய்து கொண்டு எம்மை கட்டியெழுப்ப முடியாது.

இழப்புகளை எதிர்கொண்ட மக்கள் என்ற அடிப்படையில் நாங்கள் முன்னோக்கிச் செல்ல வேண்டிய கடப்பாடுள்ளது. அதற்காக நாங்கள் பேரம்பேசும் சக்தியாக மாறும் போதுதான் எமது பலத்தினை அதிகரிக்க முடியும்.

நாங்கள் தொடர்ந்து வீணான கருத்துக்களை தெரிவித்துக் கொண்டு தேவையற்றவர்கள் பின்னால் சென்றால் எமது எதிர் கால சந்ததியினரின் இருப்பு கேள்விக் குறியானதாகவே மாற்றமடையும்.

இன்று நாங்கள் எங்களது இருப்பினை தக்கவைத்துக் கொள்வதனால் இரண்டு வழிகளே உள்ளன. கல்வியை வளப்படுத்த வேண்டும். பொருளாதாரத்தினை அதிகரிக்க வேண்டும். இவை இரண்டிலும் நாங்கள் வளமிக்கவர்களாக மாறும்போது எம்மை யாராலும் அசைக்க முடியாத நிலையே ஏற்படும்.

இன்று எமது சகோதர இனமான முஸ்லிம் மக்களை எமது மக்கள் உதாரணமாக கொள்ள வேண்டும். காலத்துக்கு காலம் வரும் அரசாங்கத்தினை ஆதரித்து அவர்கள் தங்களை வளப்படுத்திக் கொள்கின்றார்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினை பொறுத்தவரையில் அவர்கள் தமிழ் மக்களை உசுப்பேற்றி உணர்வாக கதைப்பார்கள். அது மட்டுமே செய்யமுடியும். அவர்களினால் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் இல்லை.

எதிர்காலத்தில் நாங்கள் சிந்திக்கும் மக்களாக மாறவேண்டும். எமது குழந்தைகள் நன்றாக படிக்க வேண்டும். எமது பகுதி அனைத்து துறைகளிலும் வளமடைய வேண்டும். எமது வளத்தினைக் கொண்டு நாங்கள் அபிவிருத்தியடைய வேண்டும். இதற்கு எமக்கு பலம் தேவை அவற்றினை பெறுவது தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும் என்றார். (2)

## தனியார் பேருந்துத்துறை பாதிப்பை எதிர்கொள்ளும்

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று வருட காலப் பகுதிக்குள் தனியார் பேருந்து துறை பாரிய பாதிப்பை எதிர் கொள்ளும் நிலையில் உள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கெமுனு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஒவ்வொரு நாளும் ஆயிரத்து 500 பயணிகள் வரை பொது போக்குவரத்திலிருந்து விலகிச் செல்வதாக தனியார் போக்குவரத்து சங்க தலைவர் கெமுனு விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பொது போக்குவரத்திலுள்ள சீரற்ற நிர்வாகமே இதற்கு காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## மாணவிக்கு செருப்பை மாலையாக அணிவித்த ஆசிரியைக்கு இடமாற்றம்

(கொழும்பு)

சப்பாத்து வாங்க வசதியின்றி செருப்பை அணிந்து பாடசாலைக்குச் சென்ற மாணவியொருவரை தண்டிப்பதாகக் கூறி, செருப்பை மாலையாக்கி அம்மாணவிக்கு அணிவித்த ஆசிரியையை வேறொரு பாடசாலைக்கு இடமாற்றியதுடன் அவர் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.ஏ.ஏ.புஷ்பகுமார் தெரிவித்துள்ளார்.

மேலதிக கல்விப் பணிப்பாளர் டக்ளஸ் ரணசிங்க தலைமையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஆசிரியை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவினால் சேருநுவர மாகாண கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டு விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தந்தையை இழந்த நிலையில் தாயுடன் வாழ்ந்து வந்துள்ள மேற்படி மாணவி, தன்னிடம் சப்பாத்து இல்லாத காரணத்தால் கடந்த வெள்ளிக்கிழமை செருப்பு அணிந்து பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

மேற்படி மாணவி செருப்பு அணிந்து வந்துள்ளதை அவதானித்துள்ள குறித்த பாடசாலையின் ஒழுக்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியை, அம்மாணவியை தண்டிக்கும் முகமாக செருப்பை மாலையாக்கி அம்மாணவியின் கழுத்தில் அணிவித்துள்ளார்.

இது தொடர்பில் தகவல் அறிந்த சேருநுவர பொலிஸார், அப்பாடசாலைக்குச் சென்று அதிபரிடம் விசாரித்துள்ளனர். பாடசாலையின் ஒழுக்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆசிரியையே இவ்வாறு செய்துள்ளார் என அதிபர் கூறியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரியின் சொந்த செலவில் அம்மாணவிக்கு புதிய சப்பாதது வாங்கிக்கொடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மாணவியின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இப்பிரச்சினையை பெரிதுபடுத்த விரும்பவில்லை என பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

எனவே அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (2)

## அலங்கார உற்சவம்

(புன்னாலைக்கட்டுவன்)

ஊரெழு-நாவலம்பதி ஸ்ரீஞான வைரவப் பெருமான் திருக்கோயில் அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் மேமாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திரு விழாவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மேமாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு மணவாளக் கோல விழாவும் தொடர்ந்து 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடை பெறும். மறுநாள் ஞாயிற்று க்கிழமை இரவு 7 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (2-78)

பிறந்த நாள் வாழ்த்தும் பாராட்டி வாழ்த்தும்




முல்லைத்தீவு 8 ஆம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் அதே இடத்தில் ஆதார வைத்தியசாலையில் சிற்றூழியராக கடமையாற்றிய நீக்கிலான் மோசேஸ் 29.04.2014 அன்று ஓய்வு பெற்றுக் செல்கிறார் என்பதையும் அன்று 56 ஆவது பிறந்த நாளும் கொண்டாடுகின்றார். இவரை குழந்தை யேசுவின் அருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

0775286042
0778730270

வாழ்த்துவோர்:- சிறிராகவன் (குடும்பம்), ரவீந்திரன் (குடும்பம்), சிறிதரன் (குடும்பம்), ஸ்ரெனபன் (குடும்பம்)

(6246)

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 3
கி.பா: 24 செவ் 1 இல்
உயரம்: 178 cm
தகைமை/தொழில்: A/L, Dip. in Business Management / CNC Machine Operator (அவுஸ்திரேலியா)
எதிர்பார்ப்பு: கனடா தவிர்ந்த PR உள்ள பெண்
தொ.இ: B/3044

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா: 25.25 சூரி செவ் 6 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: B/3045

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா: 16 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, MSc / சொந்த வியாபாரம் (UK – Work Permit)
தொ.இ: B/3046

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 9.5 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / நிரந்தர வேலை (UK – PR)
தொ.இ: B/3047

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: 5, உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்
எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும்
தொ.இ: G/3050

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1
கி.பா: 28, உயரம்: 5'
தகைமை/தொழில்: BA – Following / அரச உத்தியோகம்
தொ.இ: G/3051

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 52.25 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, SLAS, MBA / உதவி பிரதேச செயலர்
தொ.இ: G/3052

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: 32 உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA / அரச உத்தியோகம்
எதிர்பார்ப்பு: துணையிழந்த/விவாகரத்தானவர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
தொ.இ: G/3054

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சந்தர்ப்பங்களை பற்றிநின்று இராஜதந்திர நிலையில் வெல்வோம்!

## மேதின செய்தியில் மாவை எம்.பி.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மேதினப் பொதுக்கூட்டமும் ஊர்வலமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை தென்மராட்சியில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் ஊர்வலம் பிற்பகல் 2 மணிக்கு சங்கத்தானையிலிருந்து ஆரம்பமாகி பிற்பகல் 5 மணியளவில் தென்மராட்சி கலாசார வளாகத்திலே நிறைவுறும்.

தொடர்ந்து பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே நாள் அமைப்பாளர் மாவை. சோ.சேனாதிராசா அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள மேதின அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் ஆட்சி உரிமையை மறுத்து நிற்கும் பேரினவாத சக்திகளும் அதன் வடிவமான ஆட்சிகளும் சென்ற அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளிலும் தமிழ்த் தேசிய இனத்தைப்பூண்டோடு அழித்துவிட எடுத்துவரும் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வந்துள்ளன.

மேலும் வடக்கு கிழக்கு மாநிலங்களில் இராணுவ ஆதிக்கத்தை பேரினவாத சித்தாந்த ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகின்ற ஆட்சி, தமிழ்த் தேசிய இனத்தையும் தேசிய சிறுபான்மை இனங்களையும் ஒடுக்கி வருவது மட்டுமல்ல அவர்கள் மதங்களின் மீது பௌத்த மேலாதிக்கத்தையும் பரவிப்பாயவிட்டுள்ளது.

அதேவேளை வடக்கு கிழக்கு மாநிலங்களில் மனித குலத்தில் 70-80 வீத சிறார்களும் மற்றும் கர்ப்பிணித் தாய்மாரும் ஊட்டச்சத்தற்றவர்களாகி வீழ்ச்சியடைந்து வருகின்றனர்.

இன முரண்பாடுகளும் அடக்குமுறை ஒடுக்குமுறைகளும் தீவிரமடைந்து வருவது மட்டுமல்ல தொழிற்றுறைகள் இன்றி வேளாண்மைத் துறையில் மற்றும் கடல் வளத் துறையில் உற்பத்திவீழ்ச்சியும் மனித வளச் சீரழிவும் இடம்பெறுகின்றன.

மக்கள் உரிமையுள்ள நிலங்கள் அபகரிக்கப்படுவதும் பொருளாதார மூலவளங்கள் கொள்ளை அடிக்கப்படுவதும் சுரண்டலுக்குள்ளாக்கப்படுவதும் தீவிரமடைந்து வருகிறது.

வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் தங்கள் சொந்த நிலங்களை சொந்தக் கடல் பிரதேசங்களை வளங்களை இராணுவத்திடமும் பேரினவாத சக்திகளிடமும் இழந்து அகதிகளாய் வீழ்ந்து கிடப்போர் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றப்பட வேண்டும்.

அதற்காக அம்மக்கள் நிலங்களையும் வளங்களையும் மீட்க வேண்டும். இராணுவத்தினரை அந்த மக்கள் நிலங்களிலிருந்து அரசு வெளியேற்ற வேண்டும். எங்கள் வாழ்வுரிமையை நிலைநாட்ட வேண்டும்.

அரச ஊழியர்களும் தனியார் தொழிலாளர்களும் உயர்ந்து வாழும் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் வருமானமில்லாமல் போராடுகின்றனர்.

பெருமுதலாளிகளின் அந்நிய முதலீடுகளினால் சிறுவியாபாரிகளும் விவசாயிகள் மற்றும் சிறு தொழிற்றுறையினரும் வருமானமின்றி வங்கிக் கடனைக் கூடக்கட்ட வழியின்றி தொழிலை இழந்தும் தொழில்களை மூடியும் வருகின்றனர். சிறு விவசாயிகள் மற்றும் தொழில் துறையினர் பாரம்பரியமாய் ஈடுபட்டு வரும் உற்பத்திகளுக்கு உரிய செலவைக் கூட ஈடுசெய்ய முடியாமலும் சந்தையின்றியும் வாழ்விழந்து வருகின்றனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தினுள் இராணுவத்தினர் அத்துமீறி நுழைவதால் தமிழ்மாணவர்கள் அச்சுறுத்தப்படுகின்றார்கள். அறிவோர் ஆற்றலாளர் கல்வித் திறனாய்வாளர் துன்பத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர். நாட்டைவிட்டு ஓடிச் செல்கின்றனர்.

ஏற்கனவே காணாமற் போனோர் சிறைகளிலடைக்கப்பட்டோருக்கு விடிவில்லை. மீண்டும் கைதுகள் தொடர்கின்றன. மக்களிடம் மீண்டும் அச்சம் தீவிரமடைகிறது.

ஒட்டு மொத்தத்தில் தமிழ் பேசும் மக்கள் அரசியல் பொருளாதார ஜனநாயக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாயும் மனிதவுரிமைகள் மனிதாபிமான உரித்துக்கள் மனிதகுலப் பாதுகாப்புக்கள் அற்றவர்களாகவும் உழைக்கும் வர்க்கம் தொழிலுரிமை வாழ்வுரிமை அற்றவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

இன்றுள்ள ஒற்றை ஆட்சிக்குள் அரசியல் தீர்வு இல்லை. ஒன்றுபட்ட இலங்கைத்தீவில் மக்களின் இறைமையும் சுயநிர்ணய உரிமையும் ஏற்று அதனடிப்படையில் ஆட்சி உரிமையைப் பகிர்ந்து தமிழ் மக்களின் தன்னாட்சியை நிலை நாட்டும் அடிப்படையிலேயே அரசியல் தீர்வு ஒன்று உருவாக வேண்டும்.

சர்வதேச அரங்கில் ஐ.நா.மனிதவுரிமைப் பேரவையின் தொடர்ச்சியான தீர்மானங்கள் போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல உண்மைகள் கண்டறியப்படுவதன் அடிப்படையில் அரசியல் தீர்வு ஒன்று ஏற்பட வேண்டுமென்பதையும் உள்ளடக்கியுள்ளனஎன்பதைப்புரிந்துகொள்ள முடியும்.

அவ்விடயங்களில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கடப்பாடுகள் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் மிக முக்கியம் வாய்ந்த சந்தர்ப்பங்களாகும்.

இதனால் தமிழ்பேசும் மக்கள் ஒரு பாரம்பரியமிக்க மக்கள் தனித்துவமிக்க மனிதபுலம் அடையாள மற்று அழிக்கப்படும் நிலைக்கு எதிராகவும் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும் ஒட்டுமொத்த மானிடத்தின் மனிதகுலத்தின் பாதுகாப்புக்காகவும் நாம் அணிதிரளவும் குரல் எழுப்பவும் போராடவும் கடமையும் கடப்பாடுள்ளவர்களாகவும் நாம் எழுந்து நிற்கக் கடமைப்பட்டுள்ளோம்.

சர்வதேச சந்தர்ப்பங்கள் கூடி வரும் வேளையில் அதனைப் பற்றி நின்று இராஜதந்திர நிலையிலும் நாம் வெற்றிபெறும் வேலைத்திட்டத்தில் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

இப்பொறுப்புக்களை உணர்ந்து எம் கடமைகளை, கடப்பாடுகளை , பொறுப்புக்களை ஏற்று அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் செயலாற்றுவோம் என உறுதிபூணுவோம்.

அதன்பொருட்டு இம் மே நாளிலும் நாம் அனைவரும் அணிதிரண்டு இணைந்திட வாரீர் என அழைக்கின்றோம் என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)



சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது சுவாமியை ஆலயத்தில் இருந்து தேருக்கு எடுத்துச் செல்வதையும் பக்தர்கள் வடத்தினை பிடித்து தேரினை இழுத்துச் செல்வதையும் அடியார்களின் தூக்கு-காவடிகள் வலம் வருவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# அரசு யுத்தக் குற்றங்களை மறுத்தால் ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

யுத்த குற்றங்களை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றால் உடனடியாக நிரூபித்துக் காட்ட வேண்டும். இராணுவத்தினரால் பாலியல் வன் கொடுமைகள் இடம் பெறுகின்றதென்பது நாட்டிற்கே அவமானம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர ஹசன் அலி தெரிவித்தார்.


அரசாங்கம் பிடிவாதமாக இருந்தால் குற்றச்சாட்டு உண்மையாகி விடும். மக்கள் தொடர்பில் அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது தமிழ் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக ஐ.நா. வெளியிட்ட அறிக்கை தொடர்பில் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இறுதி யுத்தத்தில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக ஐ.நா. அறிக்கை வெளியிட்டுள்ளது. இது மிகவும் மோசமானதொரு விடயமாகவே நாம் கருதுகின்றோம். இதனை அரசாங்கம் மறுக்கின்றது. அரசாங்கம் இவற்றை மறுப்பதானால் அதற்கான தகுந்த ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்ட வேண்டும். ஒரு நாட்டில் இராணுவத்தினர் மீது இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் சர்வதேச அளவில் சுமத்தியிருப்பது சாதாரணமானதொரு விடயமல்ல.

வடக்கில் யுத்த குற்றங்கள் இடம் பெற்றதென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அதில் இருந்து அரசாங்கம் இன்னமும் விடுபட்டுக் கொள்ள முடியாத நிலையில் மீண்டும் மீண்டும் அவற்றினை வலுப்படுத்தும் வகையிலேயே குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன.



இவற்றில் இருந்து அரசாங்கம் விடுபட வேண்டுமாயின் யுத்த குற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதை உடனடியாக நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 | 80 |
| தக்காளி | 40 | 50 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 30 | 40 |
| கரட் | 100 | 80 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 30 | 40 |
| புடோல் | 50 | 50 | 50 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 70-80 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 60-80 | 100 |
| பாகற்காய் | 100 | 140 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | — | 50 |
| பயற்றங்காய் | 40 | 60 | 40 | 40 |
| லீக்ஸ் | 60 | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | — | 60 |
| கறிமிளகாய் | 60 | 80 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 25-50 | 60 | 60 | 100 |
| போஞ்சி | — | 160 | 90 | 160 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-50 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி முதல் இதுவரையில் விபத்துக்களால் 800 பேர் பலி!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் முகத்தை முழுவதுமாக மூடிய நிலையில் தலைக்கவசங்களை அணிந்து மோட்டார் சைக்கிள் செலுத்துவோரை சோதனையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக இவ்வாறான தலைக்கவசங்களை அணிந்து செல்வோர் வங்கிகளிலும் நகைக்கடைகளிலும் நடத்திய கொள்ளைகளை அடுத்தே குறித்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முகத்தை மூடிய வகையிலான தலைக்கவசங்கள் இன்னும் இலங்கையில் தடை செய்யப்படவில்லை.

எனினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தாம் மேறகொள்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளைவிபத்துக்கள் காரணமாக 800 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முதல் இதுவரையில் விபத்துக்கள் காரணமாக 800 பேர் நாட்டில் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் நாட்டில் 9ஆயிரம் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஆண்டில் 38 ஆயிரம் வாகன விபத்துக்கள் இட்பெற்றுள்ளதாகவும் இதில் 2ஆயிரத்து 350 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சாரதிகளின் கவனயீனம், மது போதையில் வாகனத்தைச் செலுத்தியமை உள்ளிட்ட காரணிகளினால் இவ்வாறு மரணங்கள் சம்பவிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாண்டில் குடிபோதையில் வாகனம் செலுத்திய 15ஆயிரத்து 384 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். (2)

# ஜாதிக ஹெல உறுமய எடுத்த தீர்மானம் பாராட்டுக்குரியது

## அத்தே ஞானசார தேரர் பெருமிதம்

(கொழும்பு)

செயல் நுணுக்க கட்டளைச் சட்டத்தின் கீழான கசினோ சூதாட்ட சட்டத்தை எதிர்த்து வாக்களித்த ஜாதிக ஹெல உறுமயவை பாராட்டுகின்றோம். அவர்கள் தமது கடமையை சரிவர நிறைவேற்றியுள்ளனர் என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்தால் கசினோ சட்டத்தை அமுல்படுத்துமா அல்லது தடை செய்யுமா என்ற கேள்விக்கு பதில் வேண்டுமென்றும் தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டையும் மக்களையும் பௌத்த மதத்தையும் முதன்மைப்படுத்தி ஜாதிக ஹெல உறுமய எடுத்த தீர்மானமானது பாராட்டுக்குரியது. அவர்களது பொறுப்பை உணர்ந்து செயற்பட்டுள்ளனர் என்றார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி தருமலிங்கம் புஸ்பராணி



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் புஸ்பராணி கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைகால் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி செல்லத்துரை தவமணிதேவி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் இத்தாலி Lecce ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவமணிதேவி கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு Cimitero Di Lecce, 73100,Italy என்னும் முகவரியில் நடைபெறும்.


### திருமதி ஞானேந்திரன் ஜெயவதனி



கிளாலை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸ் Cergy வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேந்திரன் ஜெயவதனி கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு Funererium De Pontiose 01,Place De, Pare Aux,Charetteás 95300 Pontoise France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சின்னத்தம்பி செல்லர்



பாரதி வீதி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு பத்தமேனி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கந்தையா ஆறுமுகம்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

### கணபதிப்பிள்ளை பத்மநாதன்



கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் மயிலணி சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பத்மநாதன் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சின்னதுரை தங்கம்மா



புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத் தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Ville neuve ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னதுரை தங்கம்மா கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு Centre Funeraire de Montoie,Ch.du Capelard 5,1007 Lausanne, Switzerland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணைந்தால் சேனாக்களை எதிர்கொள்ள முடியும்

## வினோ எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

ஆட்சியில் உள்ள அரசாங்கத்திற்கு அமைச்சரை விட பொது பல சேனாவின் ஆதரவும், பலமும் தேவையாக உள்ளது. பௌத்த மதவாத அமைப்புக்களையோ, கட்சிகளையோ பகைத்துக் கொண்டு ஒரு நாள் கூட ஆட்சியில் அமர முடியாது என்பதே எந்தவொரு பெரும்பான்மை கட்சிக்கும் பொருந்தக்கூடிய அரசியல் வரலாறு என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

அன்று நீதிமன்ற கட்டடத்திற்கு கல்லெறிந்து நீதவானுக்கு தொலைபேசியில் அச்சுறுத்தி, மன்னார் நகரமே எரியப்போகின்றது. தீர்ப்பை மாற்றி எழுது என சட்டத்திற்கு சவால் விடுத்த அமைச்சர் றிசாத் பதியுதீன் இன்று அமைச்சுக் கட்டடத்திற்குள் அத்துமீறி நுழைந்த பொது பல சேனா அமைப்பைச் சேர்ந்த பிக்குகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையில் இறங்கப் போவதாக மக்களை ஏமாற்ற நினைப்பது வேடிக்கையாக இருப்பதாகவும் வினோ எம்.பி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இறுதியில் பொது பல சேனாவிடமும் மன்னிப்பு கேட்டு வழக்கை விலக்கிக்கொள்ளும் கூத்தாகத்தான் இந்த பிரச்சினையும் முடியும். பொது பல சேனாவை சட்ட ரீதியாக சந்திப்பதற்கு அமைச்சர் றிசாத்திற்கு எந்தத் தகுதியும் கிடையாது.

அவர் சட்டத்தை தவறாகப் பயன்படுத்தியவர். தான் விட்ட அம்பு தன்னையே திரும்பித் தாக்குவதை கற்பனையிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார். கட்டுக்கடங்காத காட்டுத்தர்பார் நடத்தும் பொது பல சேனாவை கட்டுப்படுத்த முடியாத கையறு நிலையில் தான் அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சரின் நிலை இன்று இருக்கின்றது.

அமைச்சரின் அலுவலகத்திற்கே இந்த நிலை என்றால் நாளை அமைச்சருக்கும் இதே நிலையே ஏற்படும். இந்த நிலையில் அப்பாவி தமிழ், முஸ்லிம் மக்களின் நிலை என்ன? முஸ்லிம் மக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கும் தார்மீகத் தகுதியை இழந்து நிற்கும் அமைச்சர் றிசாத், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சுப் பதவிகளை தூக்கி எறிந்து விட்டு மறிச்சிக்கட்டி மக்களுடன் வீதியில் இறங்கி போராட முன்வர வேண்டும்.

மன்னாரிலும், வட, கிழக்கு பிரதேசங்களிலும் தமிழ், முஸ்லிம் இனங்கள் பிரிந்து நின்றால் இழந்த உரிமைகளை, இழந்த நிலங்களை ஒரு போதும் மீட்டெடுக்க முடியாது. தமிழ் முஸ்லிம் மக்களும் தலைமைகளும் ஓரணியில் நின்றால் எத்தனை சேனாக்களையும் எதிர்கொள்ள முடியும். பதவிகளை தூக்கி எறிந்து போராட நாங்கள் தயாராக இருக்கின்றோம். அமைச்சர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்து விட்டு வரத் தயாரா?

அடுத்தவன் வீட்டில் தீப்பிடிக்கும் போது கைகட்டி வேடிக்கை பார்த்து அமைதியாக எஜமானிய விசுவாசம் காட்டிய அமைச்சர், சொந்த வீட்டில் தீப்பிடிக்கும் போதுதான் அயலவனைப் பற்றி சிந்திக்கின்றார் என வினோ எம்.பி தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-250)

# பஹ்ரெய்னுக்கு ஜனாதிபதி மஹிந்த பயணமானார்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று பஹ்ரெய்ன் நாட்டுக்குப் பயணமானார்.

இலங்கைக்கும் பஹ்ரெய்னுக்குமிடையிலான இருபக்க நல்லுறவை மேலும் மேம்படுத்தும் நோக்கில் அவரது இந்த இராஜதந்திர விஜயம் அமைந்துள்ளது.

அந்த வகையில் இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையில் இருபக்க பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது என்று ஜனாதிபதியின் பேச்சாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான மொஹான் சமரநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பஹ்ரெய்ன் நாட்டின் உத்தியோக பூர்வ அழைப்பின் பேரில் இந்த இராஜதந்திர விஜயத்தை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டு மன்னர் ஹமட் பின இஸ்ஸா அல் கலீபாவுடன் இருபக்க பேச்சுவார்த்தை நடத்துவார்.

அதன் பின்னர் அந்நாட்டுப் பிரதமருடனும் எமது ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி இவ்விஜயத்தின் போது பொருளாதார. சமூக, கலாசார, வர்த்தகத்துறைகள் தொடர்பான இருபக்க உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன.

அதேநேரம், அந்நாட்டு வர்த்தக சமூகத்தினரின் மாநாட்டில் பங்குபற்றுவதுடன் அங்குள்ள இலங்கையர்களையும் சந்திக்கவுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (2)

# தேர்தல் சட்டதிருத்தம் குறித்து பவ்ரல் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை திருத்துவது தொடர்பில் சில சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் இந்த பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளது.

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலின் போது தேர்தல் சடட திருத்தம் தொடர்பில் பேசப்பட்டிருந்தது.

சட்டங்களை திருத்துவது குறித்து பவ்ரல் சில யோசனைகளை முன்வைத்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிறுவர் அரங்கம்

791

## மூன்று அபாயக் கனவுகள்



கோகர்ண ராஜ்யத்து மன்னரான மணிகண்டர் பரந்த நோக்கும், நேர்மையான குணங்களும், தர்மசிந்தனையுமுள்ளவர்! சிறந்த பக்திமான்! சாது, சன்னியாசிகளை மிகவும் மதித்துப் போற்றுபவர்! ஒரு நாள், அவருடைய அரண்மனைக்கு ஜடாதரர் என்ற முனிவர் வருகை புரிந்தார். மணிகண்டர் அவரை நன்கு உபசரித்தார். அதனால் மனம் மகிழ்ந்த ஜடாதரர் மன்னரை மனதார ஆசீர்வதித்துவிட்டு "மணிகண்டா! நீ இன்று இரவு தொடங்கி, தொடர்ந்து மூன்று இரவுகள் விபரீதமான கனவுகளைக் காண்பாய்! அவை உனக்கு வரப்போகும் அபாயத்தை சூசகமாக உணர்த்தும். அதற்கேற்றார்போல், நீ சமயோசித புத்தியுடன் நடந்து கொண்டால், வரப்போகும் அபாயங்களிலிருந்து தப்பலாம்!" என்று கூறிவிட்டுச் சென்றார்.

முனிவரின் எச்சரிக்கையைக் கேட்டு பதறிய மன்னர் தன்னுடைய மந்திரிகளை அழைத்து அவர்களிடம் அனைவற்றையும் கூறி அதைத தடுக்கும் வழியைப் பற்றி கேட்டார். விவேகன் என்ற மந்திரி, "மகாராஜா! கனவுகளே தோன்றாமல் தவிர்த்து விட்டால், பின்னர் அபாயமே ஏற்படாது. ஆகவே, நீங்கள் இன்று முதல் மூன்று இரவுகள் உறங்காமல் விழித்திருங்கள்!" என்றார்.

மன்னருக்கு வேறு எதுவும் யோசனை தோன்றாததால், விவேகன் கூறியவாறே செய்யத் தீர்மானித்தார். ஆனால், முதல் நாள் இரவு, முழுவதும் சிரமப்பட்டு சதுரங்கம் விளையாடி உறங்காமலிருந்தும், விடியும் சமயத்தில் சற்றே கண்ணயர்ந்து விட்டார்.

அந்த சிறிது நேர உறக்கத்திலேயே அவருக்கு ஒரு கனவு உண்டாகி விட்டது.

தான் ஒரு காட்டினுள் இருப்பது போலவும், தன்னை நோக்கி ஒரு நாக பாம்பு சீறிப்பாய்வதையும் கண்டார். மறுநாள் இரவு, அவர் பாட்டுக் கேட்டுக் கொண்டே தூங்காமல் இருக்க முயற்சி செய்தார். ஆனால் அன்றும் சிறிது நேரம் தன்னை அறியாமல் உறங்கிப் போனார். கனவில், வானிலிருந்து இடியும், மின்னலுமாக அவரைத் துரத்தி



வந்தது. உடனே, மன்னர் விழித்துக கொண்டார்.

மூன்றாவது இரவில், அவர் ராஜகுருவை அழைத்து புராணக் கதைகளைக் கேட்டுக் கொண்டிருக்க, இடையில் அமர்ந்தவாறே உறங்கிப் போனார். அன்று கனவில் அவரை ஒரு சிங்கம் துரத்த, அவர் ஓடிச் சென்று ஒரு குளத்தில் குதித்தார். அந்தக் குளம் முழுவதும் இரத்தம் நிரம்பியிருந்தது. குளத்தில் மூழ்கி அவர் மூச்சுத் திணறும்போது, அவருடைய மகள மணிமேகலை அவர் கையைப் பிடித்து மேலே தூக்கி விட்டாள்.

மறுநாள் காலை மந்திரிகளை அழைத்த மன்னர், அதுவரை தான் கண்ட கனவுகளைக் கூறி அவற்றின் விளக்கம் கேட்டார். நீண்ட நேரம் ஆலோசனை செய்த மந்திரிகள் மன்னருக்கு பாம்பினால், அல்லது மின்னலினால் அல்லது சிங்கத்தினால் ஆபத்து நேரிடப் போகிறது என்றும், ஆகையால் மன்னர் அரண்மனையை விட்டு ,எங்கேயும் வெளியே செல்லக் கூடாது என்றும் அறிவுரை கூறினர்.

(தொடரும்)

04.2014
29

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1672 - பிரான்சின் பதினான்காம் லூயி மன்னன் நெதர்லாந்தை முற்றுகையிட்டான்.
- 1770 - ஜேம்ஸ் குக் ஆஸ்திரேலியாவின் இன்றைய சிட்னியை அடைந்து தான் சென்ற இடத்துக்கு பொட்டனி விரிகுடா எனப் பெயரிட்டான்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: நியூ ஓர்லென்ஸ் நகரம் கூட்டணிப் படையிடம் வீழ்ந்தது.
- 1882 - பெர்லின் நகரில் எலெக்ட்ரோமோட் எனப்படும் பேருந்து வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1916 - முதலாம் உலகப் போர்: பிரித்தானிய இந்தியப் படைகள் ஓட்டோமான் படைகளிடம் ஈராக்கின் கூட் என்ற இடத்தில் சரணடைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியில் ஜேர்மனிய இராணுவம் நேச அணிகளிடம் நிபந்தனையின்றி சரணடைந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தின் பல பகுதிகளிலும் உணவுப்பொதிகளை விமானத்தில் இருந்து வீசும் மானா நடவடிக்கையை ஐக்கிய இராச்சிய வான்படையினர் ஆரம்பித்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஹிட்லர் ஏவா பிரௌன் என்ற தனது நீண்ட நாளைய காதலியை தனது பெர்லின் சுரங்க அறையில் வைத்து மணம் புரிந்தார். இருவரும் அடுத்த நாள் ஏப்ரல் 30இல் தற்கொலை புரிந்து கொண்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் டாகவ் என்ற இடத்தில் இருந்த வதை முகாமை அமெரிக்கப் படைகள் விடுவித்தனர்.
- 1946 - ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஹிடெக்கி டோஜோ மற்றும் 28 முன்னாள் தலைவர்கள் போர்க் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டனர்.
- 1970 - வியட்நாம் போர்: அமெரிக்க மற்றும் தென் வியட்நாம் படைகள் வியட் கொங் போராளிகளைத் தேடி கம்போடியாவை முற்றுகையிட்டன.
- 1975 - வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க குடிமக்கள் சாய்கோன் நகரை விட்டு புறப்பட்டனர்.
- 1986 - லொஸ் ஏஞ்சலீஸ் நகர பொது நூலகம் தீப்பிடித்ததில் 400,000 நூல்கள் அழிந்தன.
- 1991 - வங்காள தேசத்தில், சிட்டாகொங்கில் இடம் பெற்ற சூறாவளியில் 138,000 பேர் வரையில் உயிரிழந்தனர். 10 மில்லியன் பேர் வீடுகளை இழந்தனர்.
- 2005 - 29 ஆண்டு கால முற்றுகையின் பின்னர் லெபனானில் இருந்து சிரியா முற்றாக வெளியேறியது.

### பிறப்புகள்

- 1818 - இரண்டாம் அலெக்சாண்டர், ரஷ்யாவின் பேரரசன் (இ. 1881)
- 1848 - ரவி வர்மா, இந்திய ஓவியர் (இ. 1906)
- 1891 - பாரதிதாசன், புரட்சிக்கவிஞர், பாவேந்தர் (இ. 1964)
- 1938 - திமிலை மகாலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (இ. 2010)
- 1957 - மேமன்கவி, ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கியப் படைப்பாளி
- 1970 - அன்ட்ரே அகாசி, முன்னணி டென்னிஸ் ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1843 - வின்சென்ட் ரொசாரியோ, இலங்கையின் முதல் ஆயர்.
- 1980 - ஆல்ஃபிரட் ஹிட்ச்காக், ஆங்கிலத் திரைப்பட இயக்குனர் (பி. 1899)

### ரவி வர்மா



ராஜா ரவிவர்மா கேரளாவின் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள கிளிமானூர் எனும் ஊரில் 1848 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலிருந்தே சமஸ்கிருதம், மலையாளம் ஆகியவற்றுடன் ஓவியத்தையும் தம்முடைய உறவினர் ராஜா ராஜவர்மாவிடமிருந்து கற்றுக்கொண்டார்.

இவர் திருவாங்கூர் மன்னர் ஆயில்யம் திருநாள் மகாராஜாவின் உதவியுடன் 1862 ஆம் ஆண்டில் திருவனந்தபுரம் அரண்மனையில் எண்ணெய் வண்ண ஓவியக்கலைஸ்ய அரண்மனை ஓவியர் ராமசாமி நாயுடுவிடம் ஒன்பது ஆண்டுகள் பயின்றார். அவ்வேளையில் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்துகொண்டார்.

தியோடோர் ஜென்சன் என்னும் ஐரோப்பியர் 1868 இல் அரண்மனை வந்திருந்தபோது அவர் ஓ்வியம் வரையும் முறையையும் உத்திகளையும் அருகில் இருந்து கவனித்து அதன் மூலம் தாமும் அந்த ஐரோப்பியக் கலையைக் கற்றுக்கொண்டார். அயில்யம் திருநாள் மகாராஜா, ரவிவர்மா தம்மை மிகச் சிறப்பாக வரைந்ததற்காக வீரஸ்ருங்கலா என்னும் உயரிய விருதை அளித்தார்.

1894 ஆம் ஆண்டு மும்பையில் தமது அச்சகத்தை நிறுவினார். 1896 இல் அவரது அச்சகத்தில் முதல் பிரதி ஓவியம் தமயந்தி அன்னப்பட்சியுடன் உரையாடும் ஓவியம் அச்சிடப்பட்டது. நவம்பர் 24, 2002 இல் டில்லியில் நடந்த ஓவிய ஏலத்தில் இவரது யசோதையும் கிருஷ்ணனும் ஓவியம் 56 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

உலகப் புகழ்பெற்றவர்களின் ஓவியங்களை வரைந்த இவர், 1906 இல் தமது 58 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....வழியில் உள்ள காற்றாடி மண்டபத்தின் மேடையில் அமர்ந்து காற்று வாங்கும் சுகம் இருக்கிறதே, அப்பப்பா! அந்த சுகத்தை அனுபவித்துத்தான் அறிய வேண்டும் என்கிறார் இந்தப் பகுதியில் புள்ளி விபரம் சேகரிக்கச் சென்ற திருமங்கலம் ஆசிரியர் ராதா கிருஷ்ணன்.

பொழுது இருட்டிக் கொண்டு வருவதால் இத்தனை இடங்களையும் பார்க்க முடியாது என்பதாலும் அடுத்த முறை வரும்போது இப்போது பார்த்த இடங்களைத் தவிர்த்து வேறு வழியில் இவைகளைக் காணலாம் என்ற திட்டத்துடனும் இவைகளை எல்லாம் காணக் குறைந்தது ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் தேவைப்படும் என்பதாலும் பயணத்தை முடித்துக் கொண்டு வந்த வழியே திரும்புகிறோம்.

இன்று இரவு தங்கி நாளை இந்த இடங்களைப் பார்த்துவிட்டு மறுநாள் செல்ல வச்திப்படுமா? என்று ஆர்வ மிகுதியால் கூட்டத்தில் ஒருவர் கேட்க, நாளைக்கு சுமார் 10 மணிக்கு மேல் இந்தப் பகுதியில் சனநடமாட்டம் ஏதுமிருக்காது. காட்டு விலங்குகள் வெளியே வந்துவிடும். அதனால் தேவையில்லாமல் ரிஸ்க் எல்லாம் எடுக்க வேண்டாம்.

இன்று இரவு சுந்தரமகாலிங்கர் சன்னதியில் தங்கிவிட்டு நாளை காலை எட்டு மணிக்குப் புறப்படறது தான் நமக்குப் பாதுகாப்பு என்று வழிகாட்டி நாகராஜ் தெரிவிக்கவே வந்த வழியே திரும்பினோம்.

இப்பொழுது மகா இறக்கம்; கடகடவென்று இறங்கிக் கொண்டிருந்தோம். தூரத்தே சந்தன மகாலிங்கர் ஆலயம் தெரிந்தது. எதிர் மலையை நோக்கினோம். மலையின் நடுவே தவசி பாறை ஒரு சின்ன தீப்பெட்டிபோல் காட்சி தந்துகொண்டிருந்தது. அம்மாடியோவ் அவ்வளவு உயரத்திற்கா சென்று திரும்பினோம் என்பது மலைப்பாக இருந்தது.



வன பத்ரகாளியம்மன்

சந்தன மகாலிங்கர் ஆலயத்தை அடைந்து, நடந்த களைப்பு தீர ஜில்லென்ற அருவி நீரில் காலை நனைத்தோம். எவ்வளவு இதமாக இருக்கிறது.

சந்தன மகாதேவர் ஆலயத்தில் பக்தர் கூட்டம் ஏதும் இல்லாததால் நன்றாகத் தரிசனம் செய்ய முடிந்தது.

அப்பா! இறைவனைத் தனியே இப்படி அருகாமையில் தரிசிப்பது எவ்வளவு ஆனந்தத்தை அளிக்கிறது.

இவ்வளவு ஆனந்த தரிசனம் காணும் நாம் இதே சந்தன மகாதேவருக்கு நம் கையாலேயே பூக்களைத் தூவி வழிபட்டால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும். வடநாட்டுக் கோயில்களில் கூட இறைத் திருமேனிகளில் பக்தர்களே மலர் தூவி வழிபாடு செய்வதும் தீபாராதனை செய்வதும் நடைமுறையிலிருந்து வரும்போது தென்னகக் கோயில்களில் மட்டும் ஏன் இந்தத் தீண்டாமை! தரிசனம்? என ஆதங்கம் வார்த்தைகளாய் வெளிவந்தது.

"எல்லாம் ஒரு பாதுகாப்புக்குத்தான். நம்மவூர் சுவாமிகளுக்கெல்லாம் சொர்ண ஆபரணங்கள் முதலியவை அணிவிக்கப்படுவதால் அதற்கு ஒரு பாதுகாப்பு வேண்டி இவ்விதம் செய்திருக்கலாம். வடக்கே அப்படியில்லை. தவிர, நாம் வழிபடும் தெய்வத்திற்கு ஒரு புனிதத்தன்மை வேண்டாமா? அதற்காகவும் அப்படிச் செய்திருக்கலாம்" என்று சமாதானம் சொன்னார் கோமதிநாயகம்.

## ஆன்மீகம் 106

"இப்பொழுது என்ன, 'உங்கள் கையாலே இறைவனுக்கு மலர்களைச் சமர்ப்பித்து வழிபாடு செய்ய வேண்டும் அவ்வளவுதானே. கவலையே வேண்டாம். வரும் சிவராத்திரிக்கு வாருங்கள். உங்கள் ஆசை நிறைவேற்றப்படும்" என்றார் சிவனடியார்.

சிவனடியார் நம்மைக் கேலி செய்கிறாரா என்ன? சந்தேகத்துடன் அவரைப் பார்த்தேன்.

பொய் இல்லை தம்பி, உண்மையாகத்தான் சொல்கிறேன். மகாசிவராத்திரியின் போது மட்டும் சந்தன மகாலிங்கரின் திருமேனியில் பக்தர்கள் தங்கள் கைகளாலேயே மலர்களைச் சமர்ப்பித்து வழிபாடு செய்யலாம்.

சிவராத்திரியன்று இரவு இங்கு நான்கு கால பூஜை நடைபெறுகிறது. ஒவ்வொரு காலம் முடிந்ததும் பக்தர்கள் வரிசையில் நின்று சந்தன மகாதேவரைத் தரிசிப்பதுடன் தாங்களே மலர்களைச் சமர்ப்பித்தும் வழிபாடு செய்வார்கள். நீங்களும் சிவராத்திரியன்று இங்கு வந்தால் உங்கள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

25

...பள்ளிக் கூடங்களுக்கும் கோவணங்களுக்கும் விடுமுறை விட்டிருக்கும் எங்கள் ஏழைச் சிறுவர்கள்-

சாலைகளின் வண்டித்தடம்-

சுவர்களில் சிறுநீர் கழித்த பள்ளம்-

இத்தனை அவலங்களில் அழிந்து போகாமலும் இத்தனை சிதிலங்களில் சிதைந்து போகாமலும் கிராமத்துக் கண்களின் ஏதோ ஓர் ஓரத்தில் இன்னும் ஒட்டியிருக்கும் ஜீவன்-

இவைகளையெல்லாம் வெள்ளித் திரையில் விழ வைத்து ஒரு புதிய உலகத்தின் கதவுகளையும் ஜன்னல்களையும் ஓசையோடு திறந்துவிட்ட அந்த உன்னத மனிதன் யார்?

இது யாரப்பா இந்த பாரதிராஜா?

இவர் தேவலோக புருஷனாய் இருக்க முடியாது.

இவர் வெறும் தொழில் நுட்பக் கலைஞரில்லை; இவர் ஒரு வாழ்க்கையாளர்.

முதுகில் சமுத்திரத்தையும் அடிவயிற்றில் நெருப்பையும் கட்டிக் கொண்டு நீண்ட தூரம் ஓடி வந்த நிறைகலைஞர்.

ஒன்று மட்டும் புரிகிறது.

இவரது திரைக்கதை என்பது வேட்கையில் பிறந்தது; மூலக்கதை என்பது வாழ்க்கையில் பிறந்தது.

இவர் அம்மியில் ஆறவைத்த கேப்பைக்களி பார்த்தவர்.

கற்றாழைக் கரட்டில் கரட்டான் பிடித்தவர்.

அவசரமாய்ச் சந்தைக்குப் போய் நல்லெண்ணெய் பாட்டிலில் மண்ணெண்ணெயையும், மண்ணெண்ணெய் பாட்டிலில் நல்லெண்ணெயையும் மாற்றி வாங்கி வந்துவிடும் ஒரு கலாசாரப் பிரதேசத்தைக் கடந்து வந்தவர்.

இத்தனை பெரிய மகாகலைஞன் எங்கிருந்து ஜனித்தான்?

சின்னச்சாமி!

நெற்கத்தி வாசனை தெரிகிறதே!


இருக்கலாமோ?

சின்னச்சாமிக்கும் மூலம் அறிந்தேன்.

பால்பாண்டி!

சரிதான்; எங்கள் தொட்டில் பூமியேதான்.





## பாரதிராஜா

துப்பறிந்தேன்.

பாரதிராஜா என்பது இயற்பெயரன்று என்று தெளிய முடிந்தது.

அப்படியானால் மூலம்?

இப்படி ஒரு பெயரை அந்தப் பிரதேசம் மட்டுமே அறியும்.

தேனியாம்! அதன் இடுப்பில் இருக்கும் அல்லி நகரமாம்.

நிஜமாகவா?

சத்தியமாய் இது சாத்தியம்தானா?

எங்கள் காற்றைச் சுவாசித்து- எங்கள் தண்ணீர் குடித்து- எங்கள் முன்றிலில் நடந்தவனா இந்த மந்திரக் கலைஞன்?

வாழ்க்கையில் வறட்சியும்- மனதில் ஈரமும் கொண்ட ஒரு கலாசாரத்தில் கருவாகி வந்தவனா?

எவ்வள்வு பெருமையாகவும் கர்வமாகவும் இருந்தது தெரியுமா?

தூர்ந்து கொண்டிருக்கும் பண்பாட்டுத் தடயங்களைக் கலைக்குள் பதிவு செய்ய இதோ ஒரு தேவதூதன் வந்து விட்டான் என்றல்லவா நெஞ்சு விம்மி விம்மி விரிந்தது.

இப்போதாவது சொல்லுங்கள்!

நீங்கள் எப்படி இப்படி முளைத்தீர்கள்?

நீங்கள் என்னென்ன மூலகங்களின் கலவை?

நீங்கள் எதிலிருந்து கிளைத்தீர்கள்?...

(தொடரும்)

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசை கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடான கிராமிய பொருளாதார அபிவிருத்தி



வாழ்வின் எழுச்சியின் கீழ் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற காட்சிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம

வளமான இல்லம், செழிப்பான தாய்நாடு என்ற தொனிப்பொருளுக்கு அமைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுக்கமைய, மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைவாக வீட்டுத்தோட்டம், கால்நடை அபிவிருத்தி, கடற்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில் என்பவற்றின் ஊடாக கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டமாக வாழ்வின் எழுச்சி குடிசைக் கைத்தொழில் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவின் வழிநடத்துதலுடன் முன்னெடுக்கப்படுகின்றது

**கைத்தொழிற் துறை சார்ந்த அமைச்சுக்களும் நிறுவனங்களும்**

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவின் தலைமைத்துவத்தின் கீழ் ஏனைய கைத்தொழில் துறை சார்ந்த அமைச்சுக்களான கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் விருத்தி அமைச்சு, அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு, தெங்கு அபிவிருத்தி மற்றும் தோட்ட அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுக்களும் அவற்றின் கீழ் செயற்படுகின்ற 16 நிறுவனங்களும் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் நாடளாவிய ரீதியில் வாழ்வின் எழுச்சி குடிசைக் கைத்தொழில் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்குவதில் பிரதானமான பங்கை வகிக்கின்றன.

**கண்காட்சியும் காட்சிப்படுத்தலும்**

இந்த வகையில் கிராமிய மக்கள் தமக்கு பொருத்தமான குடிசைக் கைத்தொழிலைத் தெரிவு செய்வதற்கும் தொழில்நுட்பம், இயந்திரம் என்பவற்றை தெரிவு செய்து கொள்வதற்குமாக நாடளாவிய ரீதியில் 24 மாவட்டங்களில் குடிசைக் கைத்தொழிலுக்கான மாவட்ட மட்ட கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வு கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மாவட்ட கண்காட்சியிலும் பாட சாலை மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், சுய தொழிலில் ஈடுபட விரும்புவோர் என 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஆர் வத்துடன் பங்குபற்றியுள்ளார்கள். கண்காட்சியைப் பார்வையிட்ட சகலருக்கும் குடிசைக் கைத்தொழில் முயற்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்ப பயிற்சி**

இதன் கீழ் இதுவரை 24 மாவட்டங்களும் உள்ளடங்கலாக 18 ஆயிரத்து 150 குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்கள் பல்வேறு சக்தி வாய்ந்த துறைகளில் அந்தந்த துறை சார் நிறுவனங்களின் கீழ் பயிற்சிகளைப் பூர்த்தி செய்துள்ளனர். திறமையாக பயிற்சிகளைப் பூர்த்தி செய்த பயனாளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

**வாய்ப்பான கைத்தொழிற் துறைகள்**

பிரதான சக்தி வாய்ந்த துறைகளான உணவு மற்றும் பானம் எனும் துறையில் 5 ஆயிரத்து61 பயனா ளிகள் பயிற்சிகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

கைவினைக் கைப்புணித் துறையில் ஆயிரத்து 422 பயனாளிகளும், இரசாயனம் சார்ந்த உற்பத்திகள் துறையில் ஆயிரத்து 541 பயனாளிகளும், சீமெந்து சார்ந்த உற்பத்திகள் துறையில் 280 பயனாளிகளும், மரம் சார்ந்த உற்பத்திகள் துறையில் ஆயிரத்து 90 பயனாளிகளும், கித்துள் மற்றும் பனை சார்ந்த துறைகளில் 830 பயனாளிகளும், ஆடை சார்ந்த உற்பத்தி துறையில் 943 பயனாளிகளும், தையல் துறையில் 2 ஆயிரத்து 287 பய னாளிகளும், பாதணி மற்றும் தோற்பொருட்கள் சார்ந்த துறையில் 318 பயனாளிகளும், கடதாசி சார்ந்த துறையில் 540 பயனாளிகளும், சேவைத்துறையில் 3 ஆயிரத்து 218 பயனாளிகளும், இலத்திரனியல் துறையில் 230 பயனாளிகளும், தென்னை சார்ந்த உற்பத்தி துறையில் 214 பயனாளிகளும், ஏனைய பல்வகை உற்பத்திகளில் 176 பயனாளிகளும் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ளனர்.

**உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களை வழங்கல்**

வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கலாக இதுவரை திறமையான முறையில் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த பயனாளிகள் 9 ஆயிரத்து 251 பேருக்கு தமது குடிசைக் கைத்தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான அடிப்படை மூலப்பொருட்கள் மற்றும் உபகரண பொதிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

**சலுகைக் கடன் வசதிகள்**

வாழ்வின் எழுச்சி (திவி நெகும) குடிசைக் கைத்தொழில் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த பயனாளிகளுக்கு தமது தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான சலுகைக் கடன்வசதிகள ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள் ளன.

இதுவரை கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, அனுராதபுரம், கேகாலை, புத்தளம், அம்பாந்தோட்டை, கண்டி, இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, மன்னார், களுத்துறை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா ஆகிய 16 மாவட்டங்களில் வங்கிக் கிளினிக் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு 3ஆயிரத்து 178 பேருக்கு வங்கிக் கடன் வசதிகள் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.


வங்கி வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற 15 ற்கும் மேற்பட்ட வங்கிகள் முன்வந்துள்ளன. அவையாவன,

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிராந்திய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, யூனியன் வங்கி, லங்கா புத்திர வங்கி, சமுர்த்தி வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, வர்த்தக வங்கி, ஹற்றன் நசனல் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, DFCC வங்கி, நேசன் டிரஷ்ட் வங்கி, செலான் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, என்பன வாகும்.

**சந்தை வாய்ப்புகளை வழங்குதல்**

இவ்வமைச்சினால் குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகளும் சந்தைப்படுத்தலுக்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் சிறுதொழில் முயற்சியாளர்கள் பாரிய தொழில் முயற்சிகளுடன் இணைக்கப்படுவதுடன், சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி செய்முறைகளை விற்பனை செய்வதற்கும் கண்காட்சி மற்றும் விற்பனை சந்தைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.



முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உபகரணங்கள் வழங்கல

இதன் மூலம் குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுவதுடன் வறுமைக் குறைப்பு, வாழ்வாதார மேம்பாடு என்பனவும் அடையப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

**வே.சிவஞானசோதி**
**செயலாளர்**
**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு.**







வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மோகனப்பிரியன் தவராசாவின் *ஆடும் அருள் யோதி* பரதநாட்டிய நிகழ்வு இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆளுநர் செயலாளர் இ.இளங்கோவன் உரை நிகழ்த்துவதனையும் பரதநாட்டிய நிகழ்வினையும் விருந்தினர்களுடன் கலந்து கொண்டவர்கள் இருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார், மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடை குறைய வேண்டுமா?



உடல்வலுவிற்காக நடைப்பயிற்சி செய்பவர்களை விட, உடல் எடை குறைய வேண்டும் என்று நடைப் பயிற்சி செய்பவர்கள்தான் அதிகம்.

உடல் எடை குறைந்து, பார்க்க அழகாக இருக்க வேண்டும் என்ற ஆசை அனைவருக்குமுண்டு.

இதற்காக ஆயிரக்கணக்கில், ஏன் இலட்சக்கணக்கில் செலவு செய்து விலை உயர்ந்த ஃபிட் னெஸ் கருவிகள் வாங்குதல், உணவுக்கட்டுபாட்டில் இருத்தல் போன்ற முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் பலர்.

உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடின்றி உடல் எடையைக் குறைக்கலாம் என்று கூறும் விளம்பரங்களை நம்பி ஏமாறுபவர்களும் உண்டு.

உடல் எடையைக் குறைப்பது அந்தளவு கஷ்டமான காரியமா? என்று சென்னையைச் சேர்ந்த உடல் பருமன் குறைப்பு ஆலோசகர் டாக்டர் சுனிதா ரவி தெரிவிக்கையில்,

இல்லவே இல்லை... நம் அன்றாட வாழ்க்கையில் சில விடயங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றினாலே போதும்... எடை குறைவு என்பது வெகு இலகுவானது என்ற டாக்டர் சுனிதா, ஒவ்வொன்றாக விளக்கினார்.

நாம் சாப்பிடப் பயன்படுத்தும் தட்டு பெரியதாக இருக்கும்போது, அதிகளவில் உட்கொள்கிறோம். 12 அங்குல தட்டைப் பயன்படுத்துபவராக இருந்தால், அதற்கு பதில் 10 அங்குல தட்டைப் பயன்படுத்துங்கள். அப்போது தட்டில் எடுத்துக் கொள்ளும் உணவின் அளவும் குறையும்.

மிகச்சிறிய விடயம்தான், ஆனால் ஒரு நாளைக்கு 100 முதல் 200 கலோரி வரை இதன் மூலம் குறைக்க முடியும்.

ஒரே வருடத்தில் ஐந்து முதல் 10 கிலோ வரையில் உடல்எடையைக் குறைக்கலாம்.

நீல நிறத்தட்டைப் பயன்படுத்துங்கள். நீல நிறம் பசியை அடக்கும் தன்மை கொண்டது. சிவப்பு, மஞ்சள், ஒரேஞ் நிற ங்கள் பசியைத் தூண் டக்கூடியது.

பொதுவாக வயிறு நிரம்பும் வரையும், சிலர் வயிறு நிரம்பிய பின்னரும் சுவைக்காகச் சாப்பிடுவது வழக்கம்.

ஆனால், பொதுவாக வயிறு நிரம்புவதற்கு முனன்ர் சாப்பிடுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அதாவது, வயிறு 80 சதவிகிதம் நிரம்பும், 20 சதவிகிதம் காலியாக இருக்கும்.



இந்தப் பழக்கத்தைப் பின்பற்றுவதன் மூலம் நல்ல உடல்கட்டுடன் இருக் கலாம்.

காலை உணவை 8 மணிக்கு எடுத்துக்கொள்வது நல்லது. அதே போல மதிய உணவை ஒரு மணிக்குள்ளாக எடுத்துக்கொள்ள வேண்டும் 8 மணிக்குள்ளாக இரவு உணவை முடித்துவிட வேண்டும்.

8 மணிக்குப் பின்னர் பழங்கள் தவிர்த்து வேறு உணவுப் பொருட்களைச் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

மூன்று வேளையாக இல்லாமல், அதே அளவு உணவை ஆறு பாகமாகப் பிரித்து ஆறு வேளையாகச் சாப்பிடுவது மிகவும் நல்லது.

சாப்பிடும்போது ரி.வி. பார்க்காதீர்கள். வீட்டில் சமைக்கப்பட்ட உணவையே சாப்பிடுங்கள்.

சிலர் சாப்பிட உட்கார்ந்த ஒரு சில நிமிடங்களிலேயே உணவை வேகம் வேகமாக அள்ளிப்போட்டுக் கொண்டு ஓடுவார்கள். இது தவறான பழக்கம்.

சாப்பிடுவதற்குக் குறைந்தது 20 நிமிடங்களாவது ஒதுக்குங்கள். உடல்எடை குறைய வேண்டும்என்று வருபவர்களுக்கு நாங்கள் பரிந்துரைக்கும் குறிப்புக்களில் முதன்மையானது இது.

ஒவ்வொரு வாய் உணவையும் நன்கு மென்று, அசைபோட்டுச் சாப்பிடுங்கள். நாம் எடுத்துக்கொள்ளும் உணவு, இரைப்பையை அடைகிறது. இரைப்பை நிரம்பும் நேரத்தில் மூளைக்கு சமிக்ஞை அனுப்பப்படும் அதன் பின்னர்தான் போதும் என்ற உணர்வு ஏற்படுகிறது.

வேகவேகமாகச் சாப்பிடும் போது, இரைப்பை நிரம்பப்போகிறது என்ற சமிக்ஞை மூளைக்குச் செல்வதற்கு முன்பாகவே, இரைப்பையை நிரப்பி விடுகிறோம்.

இதனால், உடல் பருமன் ஏற்படுகிறது. மெதுவாகச் சாப்பிடும் போது இந்தப் பிரச்சினை தவிர்க்கப்படுகிறது.

தினமும் க்ரீன் டீ (பச்சை தேநீர்) பருகுவது உடல் எடையைக் குறைக்க மிகச்சிறந்த வழிகளுள் ஒன்று.

பச்சை தேநீரில் உள்ள இரசாயன மூலக்கூறுகள் உங்கள் உடலின் கலோரி எரிக்கும் திறனை தற்காலிகமாகச் சரிப்படுத்தி, கலோரிகளை எரிக்கச் செய்கிறது.

புத்துணர்வு தரும் எனர்ஜி டிரிங்ஸ போன்றவற்றை குடிப்பதன் மூலம் தேவையற்ற கலோரிகள்தான் சேருகிறது. இதற்கு பதில் பச்சை தேநீர் பருகுவதன் மூலம் கூடுதல் கலோரி ஏதும் இன்றி, புத்துணர்வைப் பெறலாம்.

சரியான நேரத்தில், போதுமான அளவு தூங்கி எழுந்திருப்பது உடல் எடையைக் குறைக்கும் என்கிறது ஆராய்ச்சிகள். 7 மணி நேரத்துக்கு மேல் தூங்கி எழுந்திருப்பதன் மூலம் வழக்கத்துக்கு மாறான பசி பிரச்சினை சரியாகி, வேளா வேளைக்கு சாப்பிடும் பழக்கம் வந்துவிடும்.

மேற்கத்தேய நாடுகளில் அதிக அளவில் பச்சைக் காய்கறிகள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. ஆனால், நம் ஊரில் இட்லி, தோசை, பொங்கல், சாதம், கூட்டு, பொரியல என்று அதிகம் சமைக்கப்பட்ட உணவுகளையே எடுத்துக்கொள்கிறோம்.

இதுவே, உடல்எடை கூட காரணமாகிவிடுகிறது. இதற்குப் பதில், தினமும் உணவில் மூன்று வகையான பச்சைக் காய்கறிகளை எடுத்து க்கொள்ள வேண்டும். மேலும், பழங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பச்சைக் காய்கறி, பழங்களில் அதிக அளவில் நார்ச்சத்து மற்றும் நீரச்சத்து உள்ளது. இது உங்கள்வயிறறை நிரப்புவதுடன், குறைந்த அளவிலேயே கலோரிகளை அளிக்கிறது.

காய்கறிகளைச் சமைக்கும் போது அதனுடன் எண்ணெய் போன்ற கொழுப்புப் பொருட்களைச் சேர்க்காமல் சமைக்க வேண்டும். எலுமிச்சை, மூலிகைப் பொருட்களைச் சேர்த்துப் பரிமாறும்போது சாப்பிடச் சுவையாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்.

சாப்பிடுவதற்கு முன்பு ஏதாவது ஒரு காய்கறி சூப் எடுத்துக்கொள்ளுங்கள். இது உங்கள் பசியைக் குறைக்கிறது. இதனால் வயிறு நிறைவதுடன், குறைவான கலோரிகளே கிடைக்கிறது.

## மருத்துவ உலகம்

Health Care — உங்கள் நலம் உங்கள் கைகளில்

கரட், காளான், பருப்பு சூப வகைகளை முயற்சித்துப் பாருங்கள அதிக கலோரி, கொழுப்பு நிறைந்த க்ரீமி சூப்களைத் தவிர்த்துவிடுங்கள்.

எந்தவொரு பதப்படுத்தப்பட்ட, பொதி செய்யப்பட்ட உணவையும் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

நீண்ட நேரம் உட்கார்ந்தே வேலை பார்ப்பவராக இருந்தால், ஒவ்வொரு இரண்டு மணி நேரத்துக்கும் ஐந்து நிமிடங்கள் இடைவெளி எடுத்துக்கொள்ளுங்கள். இந்த ஐந்து நிமிடத்துக்கு சின்னதாக உங்கள் இடத்தைச் சுற்றி நடந்து வாருங்கள். இப்படிச் செய்வதன் மூலம் ஒரு நாளைக்கு 20 நிமிடம் நடந்து சென்றதன் பலனை நீங்கள் பெறலாம்.

**100 கலோரி எரிக்க...**

தினமும் 100 கலோரிகளை எரிப்பதன் மூலம் எந்த உணவுக் கட்டுப் பாடும் இன்றி ஓராண்டில் தோரா யமாக ஐந்து கிலோ வரை எடை யைக் குறைக்கலாம்.

அதற்கு...20 நிமிடத்தில் ஒரு மைல் தூரத்துக்கு நடைபோடுங்கள, 20 நிமிடத்துக்கு தோட்டத்தில் புல் வெட்டுதல் அல்லது செடி நடும் வேலை செய்யுங்கள் ,30 நிமிடத்துக்கு வீட்டை சுத்தம் செய்யுங்கள், 10 நிமிடத்துக்கு ஓட்டப் பயிற்சி செய்யுங்கள், 9 நிமிடத்துக்கு கயிறடித்தல் செய யுங்கள், 20 நிமிடத்துக்கு நன்கு குனிந்து தரையைத் துடையுங்கள் என்றாா அவர்.

# ஐக்கிய நாடுகளின் தலையீட்டினால் முன்னேறிய நாடுகள் இருக்கின்றனவா?

## தேசிய சுதந்திர முன்னணி கேள்வி

**ஐக்கிய நாடுகளின் தலையீட்டினால் முன்னேறிய நாடு ஏதாவது இருக்கின்றனவா என தேசிய சுதந்திர முன்னணி, ஜன நாயகக் கட்சியின் தலைவர் சரத்பொன்சேகாவிடம் கேள்வி எழுப்பியுள்ளது.**

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில வெளியிட்டுள்ள அறிக்கையில இந்த கேள்வியை எழுப்பியுள்ளார. அதில அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களை பாதிப்புக்கு உள்ளாக்கி ஆட்சி நடத்த வந்த உலக நாடுகளில் தலையிட்டு, அதன் ஆட்சித் தலைவர்களை விரட்ட ஐ.நா செயற்பட்டது போல இலங்கையும் அந்த அமைப்பிடம் உதவி கோர நேரிடும் என ஜன நாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா கூறியிருந்தார்.

அவரது இந்த கருத்தை சிறிய விடயமாக கருதிவிட முடியாது. மிகவும் பாரதூரமான கருத்தாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அவர் வெளியிட்ட வெள்ளைக் கொடி கதையை போன்று தனது காட்டிக் கொடுப்பின் இரண்டாம் பாகத்தை ஆரம்பித்துள்ளார்.

மூன்று தசாப்தங்களாக பிரிவினைவாத புலிகள் அமைப்பான தமது கூலிப்படையினரை பயன்படுத்தி, வளம்மற்றும்கேந்திர ஸ்தானம்என்ற வகையில் முக்கியமான இலங்கையை தமது தளமாக மாற்ற மேற்குலக ஏகாதிபத்தியவாதிகள் மேற் கொண்ட நடவடிக்கை தோல்வியை தழுவிய போதிலும் அவர்கள் தமது முயற்சிகளை இன்னும் கைவிடவில்லை.

ஐ.நா மனிதவுரிமை பேரவையை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் புதிய நடவடிக்கையாகும்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இலங்கை சம்பந்தமாக தனது ஆலோசனை வழங்க நியமித்த தாருஸ்மான் குழுவில் ஆரம்பித்த செயற்பாடுகள், இன்று இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை நடத்து மாறு இலங்கையை வலியுறுத்த மனிதவுரிமை ஆணைக்குழுவை பயன படுத்தும் வரை சென்றுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா உட்பட மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் நெருங்கிய தலையீட்டில் மேற்குறிப்பிட்ட ஐ.நாவின் இலங்கைக்கு எதிரான நடவடிக்கை நாட்டிற்குள் செயற்படுத்தப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் அதற்கு சார்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வெளிநாட்டு எதிர் சக்தி பலவற்றை காண முடிகின்றது.

நாட்டுக்கு எதிரான இந்த செயற்பாடுகளை முன்னர் மறைமுகமாக மேற்கொண்டு வந்த சரத் பொன்சேகா தற்போது பகிரங்கமாக அதனை மேற்கொண்டு வருவதுடன், முக்கிய பங்காற்ற முன்னுக்கு வந்துள்ளார் எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் குற்றம் சுமத்தியுள்ளார். (2)

## ஐ.தே.க. உறுப்பினர்கள் மீது நடவடிக்கை

பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஹோட்டல் நிர்மாணம் தொடர்பான சட்ட மூலங்களுக்கு எதிராக வாக்களிக்காத ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் தொடர்பில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.


இந்த சட்ட மூலத்துக்கு எதிராக வாக்களிக்குமாறு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தி இருந்தார்.

எனினும் இதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் வரையில் சமுகமளித்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரசிங்க நாடு திரும்பிய பின்னர் தீர்மானிக்கப்படவுள்ளதாக கட்சியின் பதில் தலைவர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளைக் கக்குமா எரிக் சொல்ஹெய்மின் நூல்?



நோர்வேயின் முன்னாள் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கையில் நோர்வே மேற்கொண்ட சமாதான முயற்சிகள் தொடர்ப்பான நூல் ஒன்றை எழுதி வருவதாக தகவல் வெளியிட்டுள்ளார். இந்தத் தகவல் அரசாங்கத் தரப்புக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கக் கூடும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இப்போது இல்லாது போயுள்ளதால், எரிக் சொல்ஹெய்மின் இந்த அறிவிப்பு அவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வாய்ப்பில்லை.

ஆனால், அரசாங்கத் தரப்புக்கு இது சங்கடங்களை ஏற்படுத்தக் கூடும்.

ஏனென்றால், நோர்வேயின் அமைதி முயற்சி மேற்கொள்ளப்பட்ட காலங்களில் நடந்த பல இரகசியச் சம்பவங்கள், இன்னமும் வெளியே வரவில்லை.

2000 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மல்லாவி நகரில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்தது தொடக்கம், மீண்டும் போர் வெடித்த பின்னரும்கூட, நோர்வேயின் அமைதி முயற்சிகளில் எரிக் சொல்ஹெய்மின் பங்கு முக்கியமானது.

இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இந்த அமைதி முயற்சிகளுடன் முழுமையாகத் தொடர்புபட்டவர் என்று கூறத்தக்க சிலரே இருந்தனர்.

அதாவது அரசாங்கத் தரப்பில் முதலில் ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கமும், பின்னர் மஹிந்த ராஜபக்ச அரசாங்கமும் இந்த அமைதி முயற்சிகளில் தொடர்புபட்டிருந்தன.

எனவே, அரச தரப்பில் யாரேனும் அமைதி முயற்சிகளின் முழுமையான விடயங்களையும் அறிந்தவர்கள் யாரும் இல்லை என்றே கூறலாம்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் தரப்பில் அமைதி முயற்சியுடன் தொடர்புடைய எல்லா விடயங்களையும் அறிந்திருந்தவர்கள் என்றால் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச் செல்வன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

எனவே, அரசாங்கத் தரப்பிலோ விடுதலைப் புலிகள் தரப்பிலோ நோர்வேயின் அமைதிப்பணி குறித்து முழுவதும் தெரிந்த எவரும் தற்போது இல்லை எனலாம். ஒருவேளை, அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி அடேல் பாலசிங்கம் முழுமையாக இல்லாது போனாலும் கணிசமான விபரங்களை அறிந்தவராக இருக்கக் கூடும்.

எனவே, ஆதிமுதல் அந்தம் வரை இந்த விடயங்களில் தொடர்புபட்டிருந்தவர் என்ற வகையில் எரிக் சொல்ஹெய்ம் மட்டும்தான், இப்போது இந்த அமைதி முயற்சிகள் குறித்து அறிந்தவர்களில் எஞ்சியிருக்கும் ஒரே ஒருவர் என்று குறிப்பிடுவதில் தவறில்லை.

எனவே, அவர் எழுதி வெளியிடப் போகும் நூல் பல சர்ச்சைகளை உருவாக்கலாம். பலருக்கு மனக்கசப்பை, மனக் கொதிப்பை ஏற்படுத்தலாம். இன்னும் பலருக்கு அதிர்ச்சியையோ ஆச்சரியத்தையோ கொடுக்கலாம்.

ஏனென்றால் அமைதி காலகட்டத்தில் நிறைய இரகசிய விவகாரங்கள் நடந்திருந்தன. அமைதி இலக்கு தவறவிடப்படக் கூடாது என்பதற்காக பல விடயங்கள் மறைக்கப்பட்டன. இன்னும் பல விவகாரங்கள் மறுக்கப்பட்டன. அவையெல்லாவற்றையும் வெளிக்கொண்டுவர எரிக் சொல்ஹெய்ம் முயற்சிக்கக் கூடும்.

ஏனென்றால், இப்போது இந்த அமைதி முயற்சிகள் அனைத்தும் காலம் கடந்துவிட்டன. இனி இவற்றை மறைப்பதற்கும் ஒன்றுமில்லை. மறைப்பதால் சாதிக்கப் போவதும் எதுவுமில்லை என்ற நிலை வந்துவிட்டது.

அதேவேளை, இந்த அமைதி முயற்சிகளில் தொடர்புபட்டிருந்த எரிக் சொல்ஹெய்ம் கூட பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியவர்தான். இப்போது கூட அவரை நோக்கி கொழும்பில் இருந்து கற்கள் வீசப் படுகின்றன.

எனவே, சமாதான முயற்சிகளில் தனது ஈடுபாடு, அதன் நடுநிலைமை என்பனவற்றை நிரூபிக்கவும், உண்மைகளை வெளிக்கொணரவும், அவர் இந்த முயற்சியில் இறங்குவது தவிர்க்க முடியாததே. தனது முயற்சிகள் அனைத்தையும் நியாயப்படுத்த இதுவே அவருக்கு உள்ள ஒரே வழியும்கூட.

ஏனென்றால், எரிக் சொல்ஹெய்மைப் பொறுத்தவரையில், சமாதான முயற்சிகளில் தொடர்புபட்டிருந்த இரண்டு தரப்பிடமும் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்ளவில்லை. நோர்வேயில் சமாதான முயற்சிகள் தொடங்கிய காலம் முதல் அது முறிவடையும் வரை, எரிக் சொல்ஹெய்ம் கொழும்பில் சிங்களத் தேசியவாதிகளால் ஒரு வெள்ளைப் புலியாகவே வர்ணிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் சீருடையுடன் சொல்ஹெய்மின் படம் தாங்கிய சுவரொட்டிகள் தென்பகுதியெங்கும் தினமும் புதிது புதிதாக காட்சியளித்த காலம் ஒன்றிருந்ததை மறக்க முடியாது.

இலங்கையைப் பொறுத்த வரையில், அவரது கொடும்பாவிகள், எரிக்கப்பட்டளவுக்கு, அவமரியாதை செய்யப்பட்டளவுக்கு வேறெவருக்கும் நேர்ந்திருக்காது.

இப்போதும்கூட சிங்களத் தேசியவாதிகளும் இப்போதைய அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்களும் எரிக் சொல் ஹெய்மை, விடுதலைப் புலிகளின் கைக்கூலி என்றே வர்ணிக்கின்றனர்.

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரி மற்றும் அரச தரப்பு ஊடகங்களின் முக்கிய பிரமுகர்கள் சொல்ஹெய்மை விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி டுவிட்டரில் விமர்சித்திருந்தனர்.

இதுபோன்று தொடர்ந்து விமர்சித்தால், தமிழ் கடும்போக்காளர்களுடன் தொடர்பைத் துண்டித்தது போலவே உங்களுடனான தொடர்பையும் துண்டிப்பேன் என்று கடைசியாக எச்சரித்திருந்தார் சொல்ஹெய்ம்.

அரச தரப்பு சொல்ஹெய்மை, எப்படி விமர்சித்ததோ, அதுபோலவே விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அரசாங்கத்திடம் காட்டிக் கொடுத்துவிட்டதாக தமிழர் தரப்பும் ஒரு காலத்தில் விமர்சித்தது.

இரண்டு பக்கங்களிலும் கடுமையான விமர்சனங்களைச் சந்தித்துவிட்ட எரிக் சொல்ஹெய்ம் எழுதப்போகும் நூல், பேச்சுக்கள் தொடர்பான எல்லா உண்மைகளையும் வெளிக்கொண்டு வரலாம். சில வேளைகளில் அவர் பல உண்மைகளை மறைக்கவும் முனையலாம்.

இரண்டு தரப்பும் அமைதி முயற்சிகளில் எந்தளவுக்கு நேர்மையைக் கடைப்பிடித்தன, எந்தளவுக்கு ஆர்வம் காட்டின என்பதைவிட, எந்தளவுக்கு இரு தரப்பும் பேச்சுக்களில் இருந்து நழுவ எத்தனித்தன என்பதையும் கூட இந்த நூல் வெளிக் கொண்டு வரலாம்.

ஏற்கனவே, இலங்கையின் சமாதான முயற்சிகளில் ஏன் தோல்வி ஏற்பட்டது என்ற ஒரு ஆய்வை நோர்வே மேற்கொண்டிருந்தது. அந்த அறிக்கை பகிரங்கமாகவே வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அதில் நோர்வேயின் அமைதி முயற்சிகள் வெற்றி பெறாமல் போனதற்கு அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பும் காரணம் என்று கூறப்பட்டிருந்தது.

எரிக் சொல்ஹெய்மின் நூல் அந்த ஆய்வைவிட இன்னும் கனதியான தகவல்களை தரக்கூடும். ஏனென்றால் மிகச் சிக்கலான பல சம்பவங்களை அவர் எதிர்கொண்டவர் என்பதுடன் அவற்றில் பெரும்பாலானவை பகிரங்கப்படுத்தப்படவும் இல்லை.

எரிக் சொல்ஹெய்ம் அவற்றையெல்லாம் இனிமேலும் இரகசியங்களாகப் பாதுகாப்பார் என்று கருதுவதற்கில்லை. எனவே, அமைதி முயற்சியில் மறைக்கப்பட்ட பக்கங்கள் இந்த நூல் மூலம் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படலாம்.

அது நோர்வேக்கு மட்டுமன்றி இலங்கையினதும் எதிர்கால அமைதி முயற்சிகளுக்குப் புதிய பாடங்களைக் கற்க உதவக் கூடும்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியில் கசினோ அனுமதி கொண்டுவரப்பட்டது

## உயர் கல்வியமைச்சர் சுட்டிக்காட்டு

**ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் தான் கசினோர் சூதாட்ட அனுமதிப்பத்திர முறை கொண்டு வரப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அனுமதிப் பத்திர கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக கசினோக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அன்று போல் பரவலாக இல்லாமல் இன்று நாட்டில் 50 அல்லது 60 கசினோ நிலையங்கள் மட்டும்தான் உள்ளன என்று உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கண்டி செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜே.ஆர்.ஜெயவர்தன மற்றும் ஆர்.பிரேமதாசா ஆகியோர் காலத்தில்தான் சூதாட்டங்களை மேற்கொள்ளும் கசினோ முறை அறிமுகம் செய்யப்பட்டது. அப்போது ரணில் விக்கிரமசிங்க அமைச்சராக இருந்தார். அன்று ஜெக்போர்ட் என்ற இயந்திரம் கிராமங்கள் தோறும் பொருத்தப்பட்டு மூலை முடுக்கெல்லாம் சூதாட்டம் இடம் பெற்றது.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் 50 மில்லியனாக இருந்த அனுமதிக்கட்டணத்தை 100 மில்லியன் ஆக உயர்த்தியதால் ஜெக்போர்ட் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அன்று போல் பரவலாக இல்லாமல் இன்று நாட்டில் 50 அல்லது 60 கசினோ நிலையங்கள் மட்டும் தான் உள்ளன.

1988ஆம் ஆண்டு ஜே.ஆர். ஆட்சிகாலத்தில் முன்வைக்கப்பட்ட சட்டத்தின் மூலமே இன்றும் அது நடைபெறுகிறது. இருப்பினும் மகா சங்கத்தினர் வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப புதிதாக கசினோ நிலையங்களை அமைப்பதில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனவே பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு இயன்றளவு அதிக தூரத்திலே அவற்றை எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பௌத்த தேரர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் எதிர்ப்பை அடுத்து புதிதாக அமைக்கப்படும் ஹோட்டல்களில் கசினோ இடம்பெற மாட்டாது.

இலங்கைக்கு சுற்றுலாத்துறையினர் அதிகம் வருகை தருகின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொடுகக வேண்டும். சுற்றுலாத்துறை யினரையும், முதலீட்டாளர்களை யும் கவரும் வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். ஹோட்டல்களில் தங்கி நிற்கும் சுற்றுலாத் துறையினருக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். மலேசியா ஒரு முஸ்லிம் நாடு. அங்கு இஸ்லாமிய சட்ட திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. இருப்பினும் தனியான தீவுகளில் சுற்றுலாத்துறைக்கான கசினோ வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல் டுபாய் ஹோட்டல்களில் எல்லாமே உண்டு. மாலைதீவில் மதுச்சட்டம் கடுமையாக உள்ளபோதும் அங்குள்ள தனியான 187 தீவுகளில் உள்ள சுற்றுலா ஹோட்டல்களில் மதுபான வசதிகள் மற்றும் கசினோ வசதிகள் உட்பட அனைத்தும் உண்டு. நாம் சிங்கப்பூர், தாய்லாந்து மட்டத்தில் எமது சுற்றுலாத் துறையை வளர்ப்பதாயின் முதலீட்டாளர்களுக்குத் தேவையான குத்தகை வசதிகளையும் சலுகைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அன்று கசினோ ராஜாக்கள் ஐ.தே.க. உடன்தான் இருந்தார்கள். ஜெக்போர்ட்டை கொண்டு வந்து அறிமுகப்படுத்தியவர்கள் நாங்கள் அல்ல என்றார். (2)

# கல்வி நடவடிக்கையில் இராணுவ தலையீட்டை நிறுத்துங்கள்

## முற்போக்கு த.தே.கட்சி கடிதம் அனுப்பியது

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை யாழ். பல்கலைக்கழக ஆண்கள் விடுதிக்குள் இராணுவப் புலனாய்வுத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை கண்டித்தும் இவ்வாறான செயற்பாடுகளை இனிவரும் காலங்களில் தொடர அனுமதிக்க வேண்டாம் என கோரியும் முற்போக்கு தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். விஜயகாந் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான பாலசிங்கம் ஆண்கள் விடுதிக்குள் இராணுவ புலனாய்வுத்துறையினர் விடுதி விதிகளை மீறி உட்சென்று விசாரணையில் ஈடுபட்டமை மக்களிடையேயும் மாணவர்களிடையேயும் கடும் விசனத்தை உண்டு பண்ணியுள்ளது.

எம் மாணவர்களின் கல்வியிலும் கைவைப்பது எமக்கு மிக வேதனையையும் விசனத்தையும் உண்டு பண்ணியிருக்கிறது.

எனவே இத்தகைய செயற்பாடுகளை உடனடியாக இராணுவம் நிறுத்த வேண்டும்.

கல்வி இலட்சியத்துடன் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களின் சிந்தனை போக்கை மாற்றும் விதமான செயற்பாடுகளில் இராணுவம் ஈடுபடுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம்.

ஆகவே இத்தகைய செயற்பாடுகளை இராணுவத்தினர் நிறுத்துவதற்கு தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பணிவாக கேட்டுக் கொள்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிரதி அமைச்சர் கருணாவின் பதாகை கிழித்துச் சேதம்

(கொழும்பு)

மட்டக்களப்பு, மண்முனைப் பால நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பிரதியமைச்சர் வி.முரளிதரனின் (கருணா) பதாகை இனந்தெரியாதவர்களினால் கிழித்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

மண்முனைப் பாலம் கடந்த 19 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பொதுமக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் புதிய மண்முனைப் பால நுழைவாயிலில் பிரமாண்டமாக காட்சிப்படுத்தப்பட்டிருந்த மீள்குடியேற்ற பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விநாயகமூர்த்தி முரளிதரனின் பதாகையே இவ்வாறு கிழித்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதாகையில் 'சரித்திர நாயகனே, சமாதான கர்த்தாவே, தொடரட்டும் உன் அரசியல் பணி' எனக் குறிப்பிட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருணாவுக்கு கைலாகு கொடுக்கும் புகைப்படம்




காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இதில் கருணாவின் முகம் உள்ள பகுதியே இனந்தெரியாதவர்களால் கிழித்துச் சேதமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# இன்று ஒரு தகவல்

## குழந்தைகளின் மனச்சோர்வு

பத்து வயதுச் சிறுமி. நன்றாகப் படிக்கின்ற பண்பான சிறுமி. திடீரென்று சிறுமியின் படிப்பில் ஆர்வம் குறைந்தது. பரீட்சையில் புள்ளிகளும் குறைய ஆரம்பித்து விட்டன.

ஆனால், பழக்கவழக்கத்தில் எந்த மாறுதலும் இல்லை. எப்பொழுது பார்த்தாலும் வயிற்று வலி என்று சொல்ல ஆரம்பித்தது அந்த சிறுமி.

அப்பா, அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. படிப்பில் வேகம் குறைந்தது எதனால்? வயிற்று வலிக்கு என்ன காரணம்?.

அத்தோடு வேறு சில மாறுதல்களும் தெரிந்தன. சுலபமான வேலைகளைச் செய்வதற்குக் கூட நீண்ட நேரம் எடுத்தது.

எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருந்த சிறுமிக்கு அடிக்கடி கோபம் வரத் தொடங்கியது. தனிமையாக இருக்க வேண்டுமென்று விரும்பியது.

இது மாதிரியான அறிகுறிகளுக்கு அந்த குழந்தையின் மனதில் ஏற்பட்ட மனச்சோர்வு தான் காரணம் என்கின்றார் ஒரு வைத்தியர்.

பெரியவர்கள் எல்லாம் எப்படியென்றால், அவர்கள் மனதில் உள்ளதை வெளியில் சொல்லி விடுவார்கள்.

மொழி அதற்கு உதவி செய்கிறது.

குழந்தைகளுக்கு தங்கள் உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படையாகச் சொல்லத் தெரியவில்லை.

முதல் அறிகுறியாக,

படிப்பில் கவனமும் ஆர்வமும் குறையும். பின்னர் பரீட்சையில் புள்ளிகள் குறையும். இதைப் பார்த்து விட்டு பெற்றோர்கள் படி, படி என்று நச்சரிக்க ஆரம்பித்து விடுவார்கள். இதனால் பிரச்சினை இன்னும் அதிகமாகிவிடும்.

படிப்பில் புள்ளிகள் குறைகின்றது என்றால், அதற்கான ஏனைய காரணங்களையும் பெற்றோர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

அப்படிப்பார்க்கத் தவறும் போது குழந்தைகளுக்கு என்ன நடக்கின்றது தெரியுமா? அதற்கு தனது மனவேதனையை வெளியில் சொல்லத் தயக்கம் ஏற்படுகின்றது. இந்த நிலைமையிலே மனவேதனை, உடம்பு வலியாக உருமாறி வெளிப்படுகின்றது.

இதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் நமது குழந்தைகளுக்கு என்னவோ, ஏதோ என்று மருத்துவப் பரிசோதனை எல்லாம் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அது அநாவசியம்.

மனச்சோர்வுக்கு உட்பட்ட சில குழந்தைகள் என்ன செய்யும் தெரியுமா? பாடசாலைக்கு போவதாகச் சொல்லிவிட்டு வேறு எங்கேயாவது போய் சுற்றிவிட்டு வரும். புள்ளி குறையும் போது மனதில் ஒரு தாழ்வுணர்ச்சி வந்து விடும்.

குழந்தைகளுடைய மனச்சோர்வுக்கு என்ன காரணம்? பாரம்பரிய குணங்கள், பெற்றோர்களின் வாழ்க்கைமுறைகள், படிக்கச்சொல்லி தொந்தரவு செய்வது, வேலைக்குப் போகும் பெற்றோர்கள் குறைந்த நேரமே குழந்தைகளிடம் செலவழிப்பது பிரிந்து வாழும் பெற்றோர்கள்.

இவையெல்லாம் தான் காரணம். அதனால் பெற்றோர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒரு குழந்தை உடம்பு வலிக்கிறது என்று சொன்னால், அது மனச்சோர்வினால் கூட இருக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். மருத்துவர்களால் அதை துல்லியமாக கண்டு பிடிக்கமுடியும்.

சரி, இந்த மனச்சோர்வுக்கு மருந்து இருக்கின்றதா என்று கேட்டால், இருக்கிறது. அதற்குப் பெயர் அன்பு.

இந்த அன்பு பெற்றோர்களுக்கு இடையேயும் வேண்டும், பிள்ளைகளிடத்திலும் வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனில் சர்வதேசப் பார்வையாளர்களுக்கு ரஷ்யா முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## ஜனாதிபதி பராக் ஒபாமா வலியுறுத்து

(கோலாலம்பூர்)

**உக்ரைனில் சர்வதேச பார்வையாளர்களுக்கு ரஷ்யா முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.**

மலேசியாவில் 3 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், கோலாலம்பூரில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறியதாவது.

ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பு பார்வையாளர்களை உளவாளிகள் என்று கூறி ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் சிறைபிடித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் சர்வதேச பார்வையாளர்களுக்கு ஒத்துழைக்கும் நடவடிக்கையை ரஷ்யா மேற்கொள்ள வேண்டும்.

உக்ரைன் விவகாரம் தொடர்பாக ஜெனீவாவில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி ரஷ்யா நடந்து கொள்ளவில்லை என்பதற்காக அந்த நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடை விதிக்க ஜி-7 நாடுகள் ஒப்புதல் அளித்தன.

இது உக்ரைன் பிரச்சினைக்கு ராஜரீதியாக தீர்வு காண வேண்டும் என்பதற்கான நடவடிக்கையாகும்.

ரஷ்யாவுக்கு ஒரு தகவலை தெரிவிக்க வேண்டிய முக்கியமான கால கட்டத்தில் நாம் இருக்கிறோம். அது என்னவென்றால், உக்ரைனில் அந்நாடு மேற்கொண்டு வரும் பிரிவினைவாத தூண்டுதல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

இந்த விவகாரத்தில் ரஷ்யா நீண்ட நாட்களாக கடைப்பிடித்து வரும் ஆத்திரமூட்டும் வழிமுறைகளுக்கு மாறாக இப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வுகாண அந்நாடு முயற்சிக்க வேண்டும்.

இல்லையெனில், அதனால் ஏற்படும் விளைவுகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும் என்று ஒபாமா கூறினார்.

மலேசியாவில் இருந்து சீனாவுக்கு செல்லும்போது நடுவழியில் காணாமற்போன விமானத்தை தேடும் பணிக்கு அனைத்து உதவிகளையும் செய்ய தனது நாடு தயாராக உள்ளதாகவும் ஒபாமா கூறினார்.


இதனிடையே, ரஷ்ய போர் விமானங்கள் விதிமுறைகளை மீறி உக்ரைன் வான் எல்லையில் 7 முறை பறந்தன என்று உக்ரைன் பிரதமர் ஆர்செனிக் யாட்சென் யூக் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி தொலைபேசி மூலம் ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவிடம் கடந்த சனிக்கிழமை பேசினார்.

அப்போது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் நடவடிக்கைகள் கவலையளிப்பதாக உள்ளன.

கிளர்ச்சியாளர்கள் பதுங்கியுள்ள இடத்தில் இராணுவப் பார்வையாளர்கள் சுதந்திரமாக ஆய்வு நடத்த ரஷ்யா உதவ வேண்டும்.

உக்ரைன் எல்லையில் ரஷ்யப் படைகளின் நடமாட்டம் மற்றும் உக்



ரைன் கிழக்குப் பகுதியில் பிரிவினைகளை ரஷ்யா ஊக்குவிப்பது ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான உக்ரைனின் நடவடிக்கைகளை இழிவுபடுத்தாமல் அதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று லாவ்ரோவிடம் ஜோன் கெர்ரி வலியுறுத்தினார்.

நேட்டோ உளவாளிகள் இதற்கிடையே, உக்ரைனில் முகாமிட்டுள்ள ஜேர்மனி தலைமையிலான இராணுவ பார்வையாளர்கள் நேட்டோவின் உளவாளிகள் என்று ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# மெர்ஸ் நோயினால் 102 பேர் பலி

(ரியாத்)

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிய கண்டத்தில் வேகமாக பரவி நூற்றுக்கணக்கான உயிர்களை பறித்துச் சென்ற சார்ஸ் கிருமிக்கு இணையான மெர்ஸ் கிருமியின் தாக்குதலால் பரவி வரும் மர்ம நோயானது, கடந்த 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கண்டறியப்பட்டாலும் இதற்கான மாற்று மருந்தோ, தடுப்பு மருந்தோ இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளில் இந்த நோய் முதலில் காணப்பட்டதால் இதற்கு மெர்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.

சவுதி தலைநகர் ரியாத், ஜெட்டா மற்றும் தம்மாம் நகரங்களில் மெர்ஸ் நோய்க்கான சிறப்பு சிகிச்சை மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

இங்கு சுமார் 150 பேர் தங்கி சிகிச்சை பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்நோயினை உரிய முறையில் கட்டுப்படுத்த தவறிய அந்நாட்டின் சுகாதாரத் துறை மந்திரி அப்துல்லா அல்ராபியா கடந்த வாரம் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.



மெக்சிகோவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் சால்வேடார் சியென்பியூகோஸ், அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் சக்ஹாகெல் மற்றும் கனடா பாதுகாப்புத்துறை அமைச்சர் ராபர்ட் நிக்கல்சன் ஆகியோர் மெக்சிகோசிட்டியில் நடைபெற்ற பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

# மத்திய ஆபிரிக்காவில் இனவாத மோதல்

(பன்குயி)

பன்குயி நகரில் இருந்து சுமார் 450 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நங்கா புகொய்லா என்ற ஊருக்குள் புகுந்த சிலர் 4 பேரை சுட்டுக் கொன்றனர்.

இதனையடுத்து, கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் அந்த பகுதியில் இருந்து முஸ்லிம்கள் குடும்பத்தாருடன் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

உயிர் பிழைத்தால் போதும் என்ற பீதியில் மத்திய ஆபிரிக்காவின் வடக்கு பகுதியில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் தஞ்சம் அடையும் நோக்கத்தில் பலர் வாகனங்களில் மூட்டை முடிச்சுகளை ஏற்றிக் கொண்டு வெளியேறிய வண்ணம் உள்



ளனர்.

கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து இதுவரை கிறிஸ்தவர்களின் திடீர் தாக்குதல்களுக்கு 22 பேர் பலியாகியுள்ளனர்.

மத்திய ஆபிரிக்காவின் தெற்கு பகுதியில் உள்ள போடாவில் வாழும் சுமார் 10 ஆயிரம் முஸ்லிம்களும் பாதுகாப்பான இடங்களை தேடிச் செல்ல ஆயத்தமாகி வருகின்றனர்.

# இருவருக்கு புனிதர் பட்டம்; வத்திக்கானில் பிரமாண்ட விழா



போப் ஜான் பால் மற்றும் போப் 23 ஆவது ஜான் ஆகியோருக்கு, வத்திக்கானில், கடந்த சனிக்கிழமை புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

இயேசுநாதர் காட்டிய வழியில், நன்னெறியில் வாழ்ந்து, அற்புதங்கள் நிகழ்த்தும் வல்லமை பெற்ற கிறிஸ்தவ பெரியவர்களுக்கு, புனிதர் பட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

புனிதர் பட்டம் பெற்றவரின் பெயரால் ஆலயம் எழுப்பி, அவரை வழிபட கத்தோலிக்க திருச்சபை அனுமதி அளித்துள்ளது. இந்நிலையில், வாழ்நாளின் போதும், இறப்புக்கும் பின்பும் அற்புதங்கள் நிகழ்த்திய முன்னாள் போப் இரண்டாவது ஜான்பால் மற்றும் போப் 23 ஆவது ஜான் ஆகியோர் கடந்த சனிக்கிழமை புனிதர்களாக அறிவிக்கப்பட்டனர்.

வத்திக்கான் நகரில் நடந்த பிரமாண்ட விழாவில், போப் பிரான்சிஸ் தலைமையில் நடந்த பிரார்த்தனையின் போது, ஜான்பால் மற்றும் ஜான் ஆகியோருக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், பதவி விலகிய முன்னாள் போப், பெனடிக்ட் உட்பட, 10 இலட்சம் பேர் கலந்து கொண்டனர்.

# 20 ஆவது ஆண்டு ஜனநாயக நிறைவை கொண்டாடியது தென்னாபிரிக்கா

(ஜோஹன்னஸ்பர்க்)

கடந்த 1994 ஆம் ஆண்டு ஏப்ரல மாதம் 27 ஆம் திகதி வெள்ளையர் ஆட்சி முடிவுக்கு வந்து தென்னாபிரிக்காவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்று ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.

நேற்றுமுன்தினம் அதன் 20 ஆண்டுகால நிறைவு அங்கு கொண்டாடப்பட்டது.

இந்த கொண்டாட்டங்கள் பிரிட்டோரியாவில் உள்ள நூற்றாண்டு கால பழைமை வாய்ந்த அரசு அலுவலகங்கள் நிறைந்த யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது.

இந்த விழாவிற்கு அந்நாட்டின் ஜனாதிபதி ஜேகப் ஜுமா, பிற தலைவர்கள், வெளிநாட்டு உயரதிகாரிகள் போன்றோர் கலந்துகொண்டனர். வண்ணமயமான இந்த விழாவில் இராணுவ வீரர்களின் அணிவகுப்பும், விமானப்படை விமானங்களின் சாகச நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளிலிருந்தும் தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு வாழ்த்து செய்திகள் குவிந்தன.

இனவெறிக்கு எதிரான நீண்ட போராட்டத்தையும், நாட்டை நல்ல முறையில் உருவாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் இந்த விழா பிரதிபலித்தது.

நிலையான தங்களது அரசியல் சாசனத்தையும், மனிதவுரிமைகளுக்கான அரசியலமைப்பு ஈடுபாட்டையும், சுகாதாரம், பொது நலன், நீர் மற்றும் மின்சாரம் போன்றவற்றின் மேம்பாடுகளையும் ஜனாதிபதி ஜுமா தனது பேச்சில் குறிப்பிட்டார்.

பொதுவாழ்வில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது என்று கூறிய ஜுமா வீட்டுவசதி திட்டத்திலும் இதுவரை 3 மில்லியன் வீடுகள் அங்கு கட்டப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அதுபோல் தீவிர அக்கறையுடைய பிரச்சினையாகக் கருதப்படும் போதிலும் மனிதக் குற்றங்களும் அந்நாட்டில் குறைந்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

உற்சாகத்துடன் காணப்பட்ட பிரிட்டோரியா நிகழ்ச்சியில் பொது மக்கள் பலூன்களை பறக்கவிட்டுக் கொண்டும், சிறிய அளவிலான தென்னாபிரிக்கக் கொடிகளை கைகளில் வைத்து அசைத்துக் கொண்டும் தென்பட்டனர்.

தென்னாபிரிக்காவின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் பல அதிகாரபூர்வ மொழிகளில் உருவாக்கப்பட்ட தேசியகீதத்தை அவர்கள் இணைந்து பாடினர்.

ஆபிரிக்க தேசிய காங்கிரசைக் குறிக்கும் வண்ணம் உடைகளை அணிந்திருந்த பலர் 27 வருட சிறைவாசத்திற்குப்பின் நெல்சன் மண்டேலா 1990 இல் விடுதலை செய்யப்பட்டபோது உருவாக்கப்பட்ட சுதந்திர நடனத்தை ஆடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 இந்தியன் வீட்டுத்திட்டத்தால் அல்லற்படும் பொன்நகர் கிராமம்

(முல்லைத்தீவு)

பொன்நகர் கிராமத்திற்கு வழங்கப்பட்ட 50 இந்தியன் வீட்டுத்திட்டங்கள் சீரின்மையால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் காணியின்றி வாழ்ந்தவர்கள், கணவனை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்கள் என 50 பேரைத் தெரிவு செய்து அவர்கள் அனைவருக்கும் 1/2 ஏக்கர் வீதம் காணிகள், முள்ளியவளை மேற்கு கிராம சேவை யாளர் பிரிவின் கீழுள்ள பொன்நகர் கிராமத்தில் வழங்கப்பட்டது.



இவ்வாறாக பொன்நகர் கிராமத்தில் காணிகள் வழங்கப்பட்ட 50 பேருக்கும் இந்தியன் வீட்டுத்திட்டம் கொடுக்கப்பட்டது. எனினும் மக்களிடம் பணம் வழங்கப்படாமல் இந்திய அரசாங்கமே 50 வீடுகளையும் அமைத்து கடந்த 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதி மக்களிடம் கையளித்தது.

கையளிக்கப்பட்ட 50 வீடுகள் ஒவ்வொன்றும் 11 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டதுஎன இந்திய அரசாங்கம் கூறுகின்ற நிலையில் கிராம மக்கள் சுமார் 8 இலட்சம் ரூபா செலவிலே அமைக்கப்பட்டுள்ளதென வாதிடுகின்றனர்.

இந்த 50 வீடுகளிலும் பாரிய பிரச்சினைகள் உள்ளன. வீட்டின் அத்திபாரம், சுவர்கள், நிலம் என்பனவற்றில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஒரு வீட்டின் பிரதான கதவின் சாவி அங்குள்ள பல வீடுகளின் கதவுகளை திறக்கின்றது. அத்தோடு கதவு, யன்னல் போன்ற தளபாடங்கள் தரமற்ற பலகையினால் அமைக்கப்பட்டுள்ளதனால் அவற்றை சுலபமாக உடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது.

இவ்விரு பிரச்சினைகளால் வீட்டை பூட்டிவிட்டு வெளியில் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதென மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இதுமாத்திரமின்றி வீட்டின் கூரைகள் சீராக வேயப்படாமையினால் மழை காலங்களில் நீர் வீடுகளுக்குள் செல்கின்றது. அதே போல் சமயலறையில் அமைக்கப்பட்டுள்ள புகைப்போக்கி உரிய முறையில் நிர்மாணிக்கப்படாமையினால் அதனாலும் மழை நீர் வழிந்து வீடுகளுக்குள் செல்கின்றது.

இங்குள்ள சக்கர நாற்காலியை பயன்படுத்தும் மாற்றுத்திறனாளிகளின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்களின் தேவைக்கேற்ப வீடுகளின் வாசல்களும் மலசலகூடங்களும் அமைக்கப்படவில்லை.

இந்நிலையில் அவர்கள் இன்னொருவரின் துணையுடனேயே வீடுகளுக்குள் செல்ல வேண்டியுள்ளதோடு மலசலகூட பாவனைக்கு பல்வேறு இடையூறுகளை சந்திப்பதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

பொன்நகர் கிராமத்தில் குடியேற்றப்பட்ட 50 குடும்பங்களும் இந்தியன் வீட்டுத்திட்டத்தினால் சொல்லொணாத்துயர்களை அனுபவித்து வருகின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர், மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் ஆகியவற்றிற்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வர வேண்டும். (9-267)




## இரும்புக்கடை தீக்கிரை

(குருமன்காடு)

ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு அருகிலிருந்த இரும்புக்கடையொன்று கடந்த சனிக்கிழமை இரவு திடீரென்று தீக்கிரையாகியுள்ளது.

இதனால் 40 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக அக்கடை உரிமையாளர் தெரிவித்தார்.

எவ்வாறு தீ பரவியது என்பது தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-250)

## மேதினக் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டம் வழமை போல் இவ்வருடம் நடைபெறவுள்ளதாக கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை. குகராசா தெரிவித்துள்ளார்.

கடந்த 2 வருடங்களாக கரைச்சி பிரதேச சபையின் வளாகத்திலேயே மே தினக் கூட்டம் இடம்பெற்றது.

எனினும் இவ் வருடம் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மணியங்குளத்தில் இடம்பெறவுள்ளதனால் அனைவரையும் குறித்த இடத்திற்கு சமுகம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொதுச் சந்தை அன்றைய தினம் மூடப்படவுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (9-271)





பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வந்த சமுர்த்தி சங்கம் திவிநெகும சட்ட நிறைவேற்றத்தின் பின் வடமாகாணத்திற்கான வாழ்வின் எழுச்சி திணைக்களமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து நாடா வெட்டி திறந்து வைப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-என்.குமார், குருமன்காடு செய்தியாளர்)

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் குடியியல் ஆவணங்களைப்பெற ஏற்பாடு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் குடியியல் ஆவணங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடமாடும் சேவையும் இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் மே மாதம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யுன்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந் நிகழ்வில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களின் பிரதி, பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர் மாற்றம், திருத்தம் தொடர்பான ஏனைய பிரச்சினைகள், காலங் கடந்த பிறப்பு/இறப்பு பதிவு, உத்தேச வயதுசான்றிதழ் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கமைய இச்சேவைகள் இன்று செவ்வாய்க்கிழமை முத்தையன் கட்டுகுளம் கிராம அலுவலர் பிரிவுக்கு முத்தையன்கட்டுகுளம் பொதுநோக்கு மண்டபத்திலும் பேராறு கிராம அலுவலர் பிரிவுக்கு எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி பேராறு பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

அத்தோடு, வித்தியாபுரம், தட்டயமலை கிராம அலுவலர் பிரிவுகளுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி வித்தியாபுரம் பொதுநோக்கு மண்டபத்திலும் எதிர்வரும் 20 ஆம் திகதி முத்துவிநாயகபுரம் கிராம அலுவலர் பிரிவுக்குமுத்துவிநாயகபுரம் பொதுநோக்கு மண்டபத்திலும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஒதியமலை, பெரியகுளம் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒதியமலை பொதுநோக்கு மண்டபத்திலும் இடம்பெறும்.

மேலும் எதிர்வரும் 27 ஆம் திகதி பெரிய இத்திமடு, தண்டுவான் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தண்டுவான் பொதுநோக்கு மண்டபத்திலும் எதிர்வரும் 29 ஆம் திகதி பழம்பாசி கிராம அலுவலர் பிரிவுக்கு பழம்பாசி பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறும்.

இச் சேவை அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் மேற்கூறியவாறு குறிப்பிட்ட திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும்.

ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுக்கான கருத்தரங்கு பின்னர் இடம்பெறும். (9)

## மின்கட்டண பற்றுச்சீட்டை மாதாந்தம் வழங்குக

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பாலான கிராமங்களில் மின் பாவனைக்கான பற்றுச்சீட்டு மாதாந்தம் வழங்கப்படாமையினால் மின் கட்டணத்தை செலுத்துவதில் பாவனையாளர்கள் பல சவால்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக கரைதுறைப்பற்று ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு போன்ற பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மின் பாவனையாளர்களுக்கே இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய பாவனையாளர்களுக்கான மின் அறவீட்டுக் கட்டணத்தை செலுத்துவதற்கு மாதாந்தம் மின் கட்டண பற்றுச் சீட்டு பாவனையாளர்களுக்கு வழங்குப்படுவதில்லை.

,மாறாக ஆறு மாதங்களின் பின்பும் அல்லது ஒரு வருடத்திற்கு பின்னருமே அவர்களுக்கான மின் கட்டண பற்றுச் சீட்டு வழங்கப்படுகின்றது.

இதனால் பெருந்தொகைப் பணத்தை முழுமையாக செலுத்த முடியாத நிலைக்கு பாவனையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆகவே முல்லை.மாவட்ட மின்சார சபையினரும் மின் பாவனையாளர் சேவை நிலையமும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)

## கிளிநொச்சி கல்வி வலய தமிழ்த்தின போட்டி முடிபுகள்

(சிவநகர்)

கிளிநொச்சி கல்வி வலயத்தினரால் இவ்வாண்டு நடத்தப்பட்ட வலய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரங்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் அறிவித்துள்ளார்.

இதன்படி முதல் மூன்றிடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**ஆக்கம்-எழுத்து பிரிவு-1**

வ.மரிஸ்ரலா தனுசியா (கிளி/புனித அந்தோனியார் றோ.க.த. க.பா.), வை.டிசாந்த் (கிளி/பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்), ஸ்.சுவேக்கா (கிளி/பிரமந்தனாறு ம.வி.)

**கட்டுரை வரைதல்-பிரிவு-2**

ஆ.ஜெயசுதன் (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), வி.டிலக்சன் (கிளி/கண்டாவளை ம.வி.), இ.சரண்ஜா (கிளி/முழங்காவில் ம.வி.)

**பிரிவு-3**

யோ.டிலோசிகா (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ந.அனோஜா (கிளி/முழங்காவில் ம.வி.), ஜெ.அனுசா (கிளி/முருகானந்தாக் கல்லூரி)

**பிரிவு-4**

ந.அகல்யா (கிளி/முழங்காவில் ம.வி.), நி.நிகல்யா (கிளி/பளை மத்திய கல்லூரி), யோ.துஷ்யந்தினி (கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்)

**பிரிவு-5**

பெ.கிசோபா (கிளி/பளை மத்திய கல்லூரி), க.கஜந்தினி (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி), ச.நிலானி (கிளி/முருகானந்தாக் கல்லூரி)

**இலக்கணப்போட்டி**

சத்திய தரண்ஜா (கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்), சி.கேனுஜா (கிளி/பளை மத்திய கல்லூரி), ரூ.சரணிகா (கிளி/தருமபுரம் ம.கல்லூரி)


**பிரிவு-5**


யோ.யுசாந்தி (கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்), த.ஜெயவாணி (கிளி/வேரவில் இந்து ம.வி.), த.துஷ்யந்தன் (கிளி/தருமபுரம் ம.கல்லூரி)


**திறனாய்வு**

வி.தனுசியா (கிளி/திருவையாறு ம.வி.), இ.நிதர்சன் (கிளி/பூநகரி மத்திய கல்லூரி), இ.சுபாஜினி (கிளி/தருமபுரம் ம.க.). (9-254) (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# வடமாகாணசபையின் நேற்றைய அமர்வு

### 8 ஆவது அமர்வு

வடக்கு மாகாண சபையின் 8 ஆவது அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிவரை கைதடியிலுள்ள மாகாணசபையின் பேரவைச்செயலகத்தில் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாணசபையின் அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, பி.சத்தியலிங்கம், பி.டெனீஸ்வரன் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் எஸ்.தவராசா, ஆளும் - எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் பங்கு பற்றியிருந்தனர். இதேவேளை ஆளும் கட்சி உறுப்பினர்களான ஞா.குணசீலன், எஸ்.சிராய்பா மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் இரா.அங்கஜன் ஆகியோர் அமர்வுக்கு சமுகமளிக்கவில்லை.

### புத்தாண்டு வாழ்த்து

சித்திரைப்புத்தாண்டுக்கு பின்னர் இடம்பெற்ற அமர்வு என்பதனால் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் சபையில் தெரிவித்தார்.

### அறிவித்தல்

சபைக்கு சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகள் அனைத்தும் 150 சொற்களுக்குட்பட்டதாக இருக்கவேண்டும். அதேவேளை 15 பிரேரணைகளே சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.ஒரு உறுப்பினர் 3 பிரேரணைகளே சமர்ப்பிக்க முடியும் என்றும் அதற்கு மேல் பிரேரணை சமர்ப்பிக்க முடியாது என்றும் அறிவித்தார் அவைத் தலைவர்.

### பாதுகாப்பு பெறமுடியும்

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்களுக்கான பாதுகாப்பினைப்பெற்றுக்கொள்ள விரும்பினால் யாழ்., வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும். அதே வேளை உறுப்பினர்களின் அலுவலகம் மற்றும் வீடுகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கையினை உறுதிப்படுத்தல் ரோந்து நடவடிக்கையின் போது கண்காணிப்பு நடவடிக்கையினை அதிகரிக்கு மாறு பொலிஸ் தரப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவைத்தலைவர் கூறினார்.

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகன வசதி வழங்கப்படவேண்டும். எங்களுடைய மாகாண சபை உறுப்பினர்கள் இதுவரைகாலமும் தீர்வையற்ற வாகன வசதியைப்பெற்றுக் கொள்ளவில்லை. இதேவேளை இரண்டாம் வருடம் பணியாற்றுமிடத்தே இவ்வாறு தீர்வையற்ற வாகனம் வழங்கப்படும் நிலையில் 6 மாதங்களே ஆனநிலையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகன வசதியை உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவைத்தலைவர் தெரிவித்தார். அதே வேளை மாகாணசபை உறுப்பினர்களுக்கான தொலைபேசிக் கட்டணத்தைப் பெற்றுக் கொடுக்க அமைச்சரவை வாரிய பத்திரம் ஊடாக சிபார்சு செய்து ஆளுநரின் அங்கீகாரத்துடன் நிலுவையுடன் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

## நிறைவேறியது தீர்மானம்

தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்க கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்கக்கோரி வடக்குமாகாண சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஆளும்கட்சியின் ஏகமனதான ஆதரவுடனும் எதிர்க்கட்சியின் எதிர்ப்பிற்கு மத்தியிலும் நிறைவேற்றப்பட்டது.

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்வதற்கென்றே காலத்துக்கு காலம் ஆட்சி பீடமேறும் சிங்கள பேரினவாத அரசுகளால் திருத்தங்களுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை அரசியல் சட்டத்திலிருந்தே நீக்க வேண்டும் எனக் கோரி வடமாகாணசபையின் ஆளும்கட்சி உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகனின் தனிநபர் அவசர பிரேரணை ஒன்று நேற்று இடம்பெற்ற மாகாணசபையின் 8 ஆவது அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த சிங்கள பௌத்த பேரினவாதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தால் 03 வருடங்களுக்கு என்று மட்டும் கொண்டு வரப்பட்ட குறித்த பயங்கரவாத தற்காலிக ஏற்பாட்டுச் சட்டம் அதனை தொடர்ந்து வந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளால் 1982, 1988 ஆம் ஆண்டுகளில் நிரந்தரச் சட்டமாக்கப்பட்டது.

தமிழ் மக்களை மட்டும் இலக்கு வைத்து கொண்டுவரப்பட்ட குறித்த சட்டம், முன்னறிவித்தல் இன்றி எவரையும் எவ்விடத்திலும், தம் விருப்புக்கு ஏற்ப பொய்க குற்றம் சுமத்தி கைதுசெய்யலாம் எனும் அவசர கைதுகளுக்கும், பிணையில் எடுக்க முடியாத தடுப்பு காவலுக்கும், நீண்ட நேர சித்திரவதைகளுடன் வற்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கும், பொதுவில் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாத அந்த குற்ற ஒப்புதல் பத்திரத்தை கொண்டு வழக்குத்தாக்கல் செய்வதற்கும், தாம் விரும்பாத ஊடகத்தை தடை செய்வதற்கும் வழி வகை செய்கின்றது.

1966 ஆம் ஆண்டு ஐ.நா. சபையால் நிறைவேற்றப்பட்ட சர்வதேச குடியியல் அரசியல் உரிமைகளுக்கான உடன்பாட்டு ஒப்பந்தம், சட்ட விரோத கைதுகள், பாரபட்சமான இன மத பாகுபாடுகளுடனான விசாரணைகள், மனித சித்திரவதைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால், ஐ.நா. சபையின் சரத்துகளுக்கு முரணான குறித்த பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச்செய்யுமாறு இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து தரப்பினரையும் வடமாகாணசபை ஊடாக கோரும் குறித்த பிரேரணையை, எதிர்க்கட்சித்தலைவர் தவராசா எதிர்த்ததோடு நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் தரப்பினர் கோரவேண்டுமே தவிர இச் சபையில் தீர்மானம் கொண்டுவருவதனால் பலனில்லை என்று கூறி எதிர்த்திருந்தார்.

இருப்பினும் இந்த எதிர்ப்புக்கு மத்தியின் போதிலும், ஆளும்கட்சியான கூட்டமைப்பினரின் ஆதரவோடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப்பிரேரணையை ஆளும்கட்சி உறுப்பினரான சந்திரலிங்கம் சுகிர்தன் வழிமொழிந்ததையடுத்து நிறைவேற்றப்பட்டது.அத்தோடு இந்தப் பிரேரணையை ஆதரித்து ஆளும்கட்சி உறுப்பினர்கள் பலர் உரையாற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அமைச்சரின் அறிக்கை

இரணைமடுக்குளத்திலிருந்து குழாய் மூலம் யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் இரணைமடுக்குளத்தை நம்பி விவசாயம் செய்யும் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூறப்படுகின்ற அதேவேளை அந்த பிரதேச விவசாய அமைபபுக்களும் எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றன என்று சபையில் சமர்ப்பித்த அறிக்கையில் சுட்டிக்காட்டிய விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், குளப்புனரமைப்பினை வேறு திட்டமாகவும் குடாநாட்டுக்கு நீர் கொண்டு வரும் திட்டத்தை வேறு திட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

### தலைவருக்கு வாழ்த்து

வடக்கு மாகாணசபையின் புதிய எதிர்க்கட்சித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர் எஸ்.தவராசாவினை நாம் வரவேற்பதோடு அவருக்கு எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார். அதேவேளை உறுப்பினர் தவராசா இரண்டுமுறை பாராளுமன்ற உறுப்பினராகயிருந்தவர். அவர் எமது சபைக்கு உறுப்பினராக வரக்கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

### கமலுக்காக கவலை

முன்னாள் எதிர்க்கட்சித்தலைவராகயிருந்த கந்தசாமி கமலேந்திரனை நீதிமன்றம் இன்னும் குற்றவாளியாக இனம் காணவில்லை. அவர் இப்போதும் சந்தேக நபராகவே உள்ளார். ஆனால் அவர் சார்ந்திருந்த கட்சியான ஈ.பி.டி.பி. அவரைக் குற்றவாளியாக கண்டு கட்சியிலிருந்து நீக்கிவிட்டு அவருடைய இடத்திற்கு உறுப்பினர் தவராசாவினை நியமித்துள்ளது. அந்தக்கட்சியின் எண்ணம் எப்படியுள்ளது என்று எமக்குத் தெரியவில்லை. கமலேந்திரன் நிரபராதி என்று தான் நாம் கூட எண்ணுகின்றோம் என்றார் வடக்கு முதலமைச்சர்.

### சர்ச்சையை ஏற்படுத்திய கன்னியுரை

வடக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராக நியமனம் பெற்றுள்ள உறுப்பினர் தவராசாவின் கன்னியுரை நேற்று நடைபெற்ற 8 ஆவது அமர்வில் இடம்பெற்றது. இதன்போது 13 ஆவது திருத்தச்சட்டம் ஆனது ஆயிரக்கணக்கான இளைஞர்களின் தியாகங்களின் பலனாக கிடைத்தது. அதேவேளை 13 ஆவது திருத்தச்சட்டமானது தமிழ்மக்களின் அபிலாஷைகளை பூரணமாக நிறைவேற்றும் வகையில் அமைய வில்லை. இக்கூற்று பிழையில்லை என்றும் நான் கருதுகின்றேன். அதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டமானது பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை என்ற குற்றச் சாட்டும் உள்ளது. பல குறைபாடுகள் உள்ளதை நாம் மறுக்கவும் முடியாது. அதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டம் பூரணமாக அமுல்படுத்த வலியுறுத்துவோம் என்றும் கூறினார். அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட சில விடயங்களை வரவேற்றும் பேசினார். அதனை விட முதலமைச்சரின் கடந்த கால உரைகளை மேற்கோள் காட்டி அதில் வலியுறுத்தப்பட்ட சில விடயங் களை பற்றி தனது கருத்தைக்கூறியதோடு மாகாண சபைக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தக்கூடிய வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்றும் முதலமைச்சருக்கு பிழையான தகவல்களை வழங்கி பிழையாக வழிநடத்துவதாகவும் சாடியிருந்தார்.

### குறுக்கிட்ட சிவாஜி

எதிர்க்கட்சித்தலைவரின் கன்னியுரை இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதும் ஏனைய உறுப்பினர்களின் உரை இடம்பெற்ற போது அடிக்கடி குறுக்கிட்ட ஆளும்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கடுமையான வார்த்தை பிரயோகங்களிலும் ஈடுபட்டு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார். குறிப்பாக வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட்டபோது ஈ.பி.டி.பி எதிர்க்காதது ஏன்என்று தவராசாவின் உரையின் போது குறுக்கிட்டதோடு பூகோள நலனைக்கருத்தில் கொண்டே சீனா மீளச் செலுத்தாத கடனை இலங்கை அரசிற்கு வழங்குகின்றது என்று கூறினார்.

### பொது பலசேனாவுக்கு கண்டனம்

கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாட் பதியூதீனின் கொழும்பிலுள்ள அலுவலகத்திற்குள் அத்துமீறிய பொதுபலசேனாவிற்கு இச்சபையின் எதிர்க்கட்சி கண்டனம் தெரிவிக்காவிட்டாலும் நாம் அந்தச்சம்பவத்திற்கு கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றோம் என்றார் ஆளும் கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம்.

இவ்வாறு நேற்று இடம்பெற்ற 8 ஆவது அமர்வில் அனல்பறக்கும் விவாதங்கள், நக்கல் நையாண்டிப்பேச்சுக்கள், குதர்க்கமான கருத்துக்கள் என்பனவற்றுடன் இடம்பெற்றது.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிவு பலவீனமல்ல; அதுவே பலம்.
பணிவு அதிகமானால் சக்தியும் அதிகரிக்கும்.
– சுவாமி சிவானந்தா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கின் மாடிக்கடைகளும் யாழ். மாநகரத்தின் வாஸ்து சாஸ்திரமும்

ஒழுங்கீனத்திலேனும் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான அபிப்பிராயம். எனினும் எங்களிடம் ஒழுங்கீனத்திலும் ஓர் ஒழுங்கைக் காணமுடியவில்லை என்றே கூறலாம்.

வெள்ளிக்கிழமை என்றால் முஸ்லிம்களின் தொழுகைக்காகப் பாடசாலைகள் முற்பகல் 11.30 மணியுடன் நிறைவுபெறும்.

கௌதம புத்தபிரான் ஞானம் பெற்ற பூரணையில் பௌத்தர்கள் வழிபாடாற்றுவதற்காக, ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற பூரணையில் அரச வங்கி, வர்த்தக விடுமுறை அமுலாகும். ஞாயிற்றுக்கிழமைகளில் கத்தோலிக்கர்கள் தேவாலயம் செல்வது கட்டாயம். ஆனால் இந்துக்களுக்காக இந்த மண்ணில் ஏதாவது இடம் உள்ளதா என்றால் இல்லவே இல்லை.

சிவராத்திரி அன்று செமினார் நடக்கும். ஆடி அமாவாசை அன்று கந்தோர்கள் எல்லாம் திறந்து கடமை நடக்கும். அதுபற்றி யாரேனும் சிந்திப்பார்களா? என்றால் இல்லவே இல்லை.

எது நடந்தாலும் எல்லாவற்றுக்கும் ஆமாம் போடுகின்ற இந்து சமயிகள் இருக்கும் வரை, இரண்டு பஞ்சாங்கம் எங்களைக் குழப்பும் வரை எல்லாம் நடந்து முடியும்.

இதற்கெல்லாம் காரணம் இந்து சமயத்தின் பண்பாடுகள் வெறும் சடங்குகளாக இருக்கின்றனவே தவிர, அவை சட்டம் போல அமுலாகுவதில்லை.

ஒரு முஸ்லிம் இறந்து விட்டால் 24 மணி நேரத்திற்குள் அடக்கம் செய்ய வேண்டும் என்ற விதிமுறையை மருத்துவர்களும் நீதிபரிபாலனமும் கைகட்டி நின்று நிறைவேற்றும்.

அதே இடத்தில் ஓர் இந்துவாயின் நேரம் கிடைக்கும் போது சடலத்தை ஒப்படைக்கலாம் என்றாகி விடுகிறது.

ஏன் இப்படி ஒரு நிலை? என்று சிந்திப்பதற்கு இந்து சமயத்தில் யாரும் இல்லாதபோது இதுவும் நடக்கும் இன்னமும் நடக்கும்.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் வீடு கட்டுவதற்கான அளவுத்திட்டங்கள் ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுள்ளன.

12 அடி நீள, அகலம் கொண்ட விஸ்தீரணமே யாழ்.மாநகர சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்ட ஆகக் குறைந்த அளவாகும்.

ஆனால் 12 அடி என்பது வாஸ்து சாஸ்திரத்தில் மிகவும் பிழையான ஓர் அளவு. வாஸ்து சாஸ்திரத்தில் 10 அல்லது 11 அடி நீள அகல அளவுகளே உன்னதமானவையாகக் குறிக்கப்பட்டுள்ளன. எனினும் இந்த அளவுத்திட்டத்தை யாழ்ப்பாண மாநகர சபை அங்கீகரிக்கமாட்டாது.

எனவே அளவுத்திட்டத்தை மீள் நிர்ணயம் செய்வது அவசியம். அவ்வாறு மீள் நிர்ணயம் செய்யும் போது, வாஸ்து சாஸ்திரத்தில் நிபுணத்துவம் உடையவர்களின் ஆலோசனையையும் உள்வாங்க வேண்டும்.

இந்து சமயத்தவர்களின் வீடுகள் வாஸ்து சாஸ்திரத்தை மையமாகக் கொண்டவை. வாஸ்து பிழைத்தால் அது பல்வேறு சிக்கல்களைத் தரும் என்ற நம்பிக்கைகளை சமகாலத்துச் சம்பவங்களும் நோய் நிலைகளும் மேலும் வலுப்படுத்துவதாக இருப்பதால், இதுபற்றி யாழ்ப்பாண மாநகர முதல்வர் நல்லதொரு முடிவை எடுப்பார் என்று நம்பலாம்.

அதேநேரம் வாஸ்து பற்றி வட மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் கவனம் எடுப்பது இந்து சமயிகளின் நம்பிக்கைக்கு அவசியமாகும்.

அட, இதை நாம் கூறும் போது வட பகுதியில் உள்ள மாடிக் கடைகள் இன்னமும் மூடிக்கிடக்கின்ற துர்ப்பாக்கியநிலை பற்றியும் ஆராய்வது காலத்தின் தேவையல்லவா? என்ற உங்களது முணுமுணுப்பும் கேட்கவே செய்கிறது.

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு தீர்ப்பு; மனிதவுரிமை அமைப்புக்கள் கவலை

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள்தண்டனை கைதிகளாக உள்ளவரகளின் விடுதலை தொடர்பான விசாரணை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டதை மனிதவுரிமை அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன.

வழக்கின் வாதப் பிரதிவாதங்கள் முடிவடைந்து, தீர்ப்பு வருமென்று கருதப்பட்ட வேளையில், வழக்கை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றியது ஏமாற்றம் அளிக்கிறது என்று பியூசிஎல் எனும் மனிதவுரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேபோன்ற வழக்குகளை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்ற வேண்டுமென்று மத்திய அரசு உச்சநீதி மன்றத்தில் வாதாடிய போது, நீதிபதிகள அதை நிராகரித்திருந்தனர் என்று அந்த அமைப்பின் மூத்த உறுப் பினரும் வழக்கறிஞருமான பாலமுருகன் கூறினார்.

யார் இறந்தார்கள் என்பதன் அடிப்படையில் ஒரு வழக்கைப் பார்ப்பது சரியல்ல என்றும், மாநில அரசின் அதிகாரங்களை மத்திய அரசு கைப்பற்ற நினைபபது சரியா தவறா என்பதையே சட்ட ரீதியாகப் பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவிததார்.

தண்டனைக் குறைப்பை அளிகும் அதிகாரம் மாநில அரசுக்கு உள்ளது என்பது அரசியல் அமைப்புச் சட்டத்தில் தெளிவாக இருக்கிறது என்றும், மத்திய அரசு சார்ந்த குற்றங்களில் அவர்களது ஆலோசனை பெறப்பட வேண்டும் என்று கூறப் பட்டுள்ளதே தவிர அனுமதி பெறப் பட வேண்டும் எனச் சொல்லப்படவில்லை.

கேரளா போன்ற மாநிலங்களில் மத்திய அரசு சார்ந்த குற்றங்கள் வரும் போது அவர்கள் யாரையும் அணுகுவதில்லை என்றும் தமது அதிகார வரம்புக்கு உட்பட்டு தண்டனை பெறறவர்களை விடுதலை செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்கிறார்கள் எனவும அவர் கூறினார்.

முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோர் மீது தொடரப்பட்டிருந்த மத்திய அரசின் குற்றங்களான கடவுச் சீட்டு தொடர்பான குற்றம், தொலைத் தொடர்பு தொடர்பான குற்றம், வெடிபொருட்கள் தொடர்பிலான குற்றம் ஆகியவற்றில் அவர்கள் தண்டனைக் காலத்தை ஏற்கெனவே தண்டனையை கழித்துள்ளார்கள் என்பதால், அதைக் காரணம் காட்டி, மத்திய அரசு தமது அனுமதி வேண்டும் என்று முன்வைக்கும் வாதம் முறையானது அல்ல எனவும் அவர் தெரிவித்தார். (2)

# வில்பத்தில் குடியமர்ந்தவர்களுக்கு 50 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது

## மன்னார் மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

(மன்னார்)

வில்பத்து தேசிய பூங்காவுக்குட்பட்ட சர்ச்சைக்குரிய பிரதேசத்தில் குடியேறியுள்ள 73 குடும்பங்களையும் குடியமர்த்துவதற்காக பூங்காவிற்கு புறம்பாக வெளியே 50 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருப்பதாக மன்னார் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் இருவார காலப் பகுதிக்குள் இந்தக் காணிகளை பிரித்து வழங்கக் கூடியதாக இருக்குமெனக கூறிய மாவட்ட செயலாளர், அதனைத் தொடர்ந்து காணிகளை சுத்திகரிக்க வேண்டியிருப்பதாகவும் கூறினார்.

குடியமர்த்தப்படவுள்ள குடும்பங்களுக்கு புத்தளத்தில் அல்லது நாட்டின் ஏதேனும் பகுதிகளில் அரசாங்கத்தினால் காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பது ஒன்றுக்கு இரண்டு தடவைகள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னரே அவர்களுக் குரிய காணிகள் ஒப்படைக்கப்படுமெனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மாவட்டச் செயலாளருக்குள்ள அதிகாரங்களுக்கமையவேதான் இந்தக் காணியை ஒதுக்கீடு செய்திருப்பதாக குறிப்பிட்ட அவர், காணிகளில் மீள் குடியேறுவதற்கு ஏற்ற வகையில் தற்காலிக கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்படுமெனவும் பின்னர் அவர்கள் தமக்குரிய வீடுகளை கட்டுவதற்கான சீமெந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

ஒதுக்கப்பட்ட காணி வனவிலங்குகளுக்குரிய பகுதிகளிலிருந்து புறம் பாக காணப்படுவதனால் காட்டு யானைகளினால் குடியேற்ற வாசிகளுக்கு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பில்லையெனவும் இதற்கிணங்க வனவிலங்கு பாதுகாப்பு வலயங்கள் அமைக்கும் பணிகள் துரிதப் படுத்தப்படுமெனவும் அவர் கூறினார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் றிசாட் பதியுதீன்,

இம் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும், இல்லை. இந்த விடயத்தை மீளக் குடியேறவுள்ள மக்கள் பூதாகரமாக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை தனக்கு உண்டென்றும் தெரிவித்துள்ளார். (2)

## சித்திரைப் பரணி திருவிழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு கல்லுடை கன்னியர் வைரவர் ஆலய சித்திரைப் பரணித் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு சைவப்புலவர் நித்தியதசீதரன், வர்ணனை கலாநிதி அருளானந்தன் ஆகியோரின் சொற்பொழிவுகளும் தொடர்ந்து திருவிளக்குப் பூஜையும் நடைபெற்று எம்பெருமான் திருவீதியுலா எழுந்தருளுவார். (2)

## ஆண்டு நிறைவு விழா

(சாவகச்சேரி)

செலான் வங்கி சாவகச்சேரி கிளையின் 3ஆம்ஆண்டுநிறைவுவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளை முகாமையாளர் எஸ். சந்திரகாந்தன் தலைமையில் மேற்படி வங்கி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது வைப்புகளை மேற்கொண்ட வாடிக்கையாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. (2-29)

# இளைஞர் அலுவல்கள் அமைச்சில் பல்வேறு பதவி வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதான பொறியியலாளர் பதவி ஒரு வெற்றிடத்திற்கும் பொறியியலாளர் (சிவில்), கணக்காளர் ஆகிய பதவிகளுக்கு தலா இரண்டு வெற்றிடங்களும் பிரதி/உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்குமான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் dtetdgoffice@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவோ அல் லது உரித்தான திணைக்களத் தலைமையூடாகவோ பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், கொழும்பு-10 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்

மேலதிக விபரங்களை வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## உழைத்தால் சாதிக்கலாம்



- நியாயத்தை எடுத்துச் சொல்வதில் கோழையாக இராதீர்கள். உலக நன்மைக்காக சண்டை செய்வதில் வீரராக இருங்கள்.
- உங்களை ஏழை என்று நினைக்காதீர்கள். பணம் ஒரு சக்தியல்ல. நன்மையும் தெய்வபக்தியுமே சக்தி.
- இந்த உலகில் தோன்றிய நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும்.
- தனியாக இருந்து கொண்டு பலருடைய பகையை தேடிக் கொள்பவன் அறிவற்ற மூடனைப் போன்றவன்.
- செல்வம் பெருகிய காலத்தில் ஒருவனுக்கு பணிவு வேண்டும். அதே சமயம், செல்வம் குறைந்து வறுமை வரும் காலத்தில் பணியாத துணிவு வேண்டும்.
- கடின உழைப்பு இல்லாமல், பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட்; சென்.ஜோன்ஸ் ரெட் அணி சம்பியன்





யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மறைந்த அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தப்படும் அணிக்கு 6 பேர் கொண்ட (5 ஓவர்கள்) கடினபந்து துடுப்பாட்டப் போட்டியில் சென்.ஜோன்ஸ கல்லூரி ரெட் அணி சம்பியனாகியது.

தொடரின் முதற் சுற்றுப் போட்டிகள் சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானங்களில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றதுடன் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி மறுநாள் சனிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சுற்றுப்போட்டியில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சம்பியனாகியிருந்தது.

தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், 2010 ஆம் ஆண்டு தொடக்கம 2013 ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற போட்டிகளில் கொக்குவில் இந்து கல்லூரி அணியும் சம்பியன் பட்டத்தை தமதாக்கி கொண்டிருந்தன.

இம்முறை சுற்றுப்போட்டியில் 10 பாடசாலைகளைச் சேர்ந்த 12 அணிகள் பங்குபற்றியதுடன் முதற்சுற்றுப் போட்டிகள் லீக் முறையில் நடைபெற்று 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. தொடர்ந்து அரையிறுதி மற்றும் இறுதி போட்டிகள் இடம்பெற்றன.

இப் போட்டிகளின் அடிப்படையில் இறுதிப் போட்டிக்கு முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியும் சென் ஜோன்ஸ் கல்லூரி ரெட் அணியும் தகுதி பெற்றன.

நாணயற்சுழற்சியில் வெற்றிபெற்று துடுப்பாடிய முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி 5 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 52 ஓட்டங்கூளைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.ஜோனஸ் கல்லூரி ரெட் அணி இறுதிப் பந்தில் 3 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 53 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. போட்டியின் சிறப்பாட்டக்காரனாக சென் ஜோன்ஸ் கல்லூரி ரெட் அணியின் கபில்ராஜ் தெரிவானார்.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் மோதியது.

நாணயற்சுழற்சியில் வென்ற கொக்குவில் இந்துக் கல்லூரி 4.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 25 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பதிலளித்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 2.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டி 3 ஆவது இடத்தை தமதாக்கியது. (க-23)

# பெண்களுக்கான மென்பந்தாட்ட போட்டி; சுழிபுரம் விக்டோரியா சம்பியன்



யாழ்.மாவட்ட பாடசாலை பெண்கள் துடுபபாட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து நான்காவது வருடமாக சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி பெண்கள் அணி சம்பியனாகியுள்ளது.

யாழ்.மாவட்ட 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டி அண்மையில் குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தில் நடைபெற்றது.

அணிக்கு 11 பேர் 10 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இந்த மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலும் இருந்து தலா 3 அணிகள் என்ற ரீதியில் 15 அணிகள் பங்குபற்றியிருந்தன.

போட்டிகள் அனைத்தும் விலகல் முறையில் நடைபெற்றன.

அதனடிப்படையில், பெண்களுக்கான இறுதிப்போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியினை எதிர்த்து வட்டு இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 89 என்ற வெற்றியிலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வட்டு இந்து அணி 10 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

இதனால் 25 ஓட்டங்களால் சுழிபுரம் விக்டோரியா அணி சம்பினாகியது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியினை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு 44 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி 9.1 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

தாவடி றெயில் றைடர்ஸ் விளையாட்டு கழகம் 18 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையே கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றினை நடத்தவுள்ளது.


இப் போட்டிகள் மே மாதம் 1 ஆம் திகதி காலை 9 மணி முதல் தாவடி அம்பலவாணர் முருகமூர்த்தி ஆலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டிகளில் 18 வயதிற்குட்பட்ட அணிகள் மட்டுமே பங்குகொள்ள முடியும் என்பதுடன், போட்டியின் போது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் அவசியமாகும்.

போட்டிகள் அணிக்கு 7 பேர் 6 ஓவர் கொண்டவையாக இடம்பெறவுள்ளது.

பதிவுகளை மேற்கொள்வதற்கும் மேலதிக விபரங்களிற்கும் 077 78 18 108 என்னும் இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-23)








அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதை பந்தாட்டப் போட்டியில் கரவெட்டி பிரதேச சபை அணி வெற்றி பெற்றுக் கொண்டது. கரவெட்டி பிரதேச சபையின் அணியின் அணித் தலைவர் பாரதிராஜ் வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொள்வதையும் அணியின் வெற்றியை உறுதிசெய்து சிறந்த ஆட்டக்காரராக தெரிவு செய்யப்பட்ட ம.சதீஸ்கரன்(ராஜா) அவர்களையும் வெற்றி பெற்ற அணியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரை வீழ்த்தி பஞ்சாப் தொடர் வெற்றி



பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் பஞ்சாப் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் தொடரில் நேற்று டுபாயில் நடைபெற்ற 18-வது ஆட்டத்தில் பெங்களூர்-பஞ்சாப் அணிகள் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

முதலில் ஆடிய பெங்களூர் அணிக்கு, பஞ்சாப் பந்துவீச்சாளர்கள் கடும் சவால் அளித்தனர். குறிப்பாக டொப் ஆர்டர் துடுப்பாட்ட வீரர்கள் சந்தீப் சர்மாவின் மிரட்டல் பந்துவீச்சில் விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினர். தொடக்க வீரர் கெய்ல் 20 ஓட்டங்களில்



ஆட்டமிழந்தார். கப்டன் கோலி 4 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்து ரசிகர்களை ஏமாற்றினார்.

நெருக்கடியான நேரத்தில் கைகொடுத்த யுவராஜ் சிங் 32 பந்துகளில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் உள்பட 35 ஓட்டங்கள் சேர்த்து ஆறுதல் அளித்தார். இதேபோல் டி வில்லியர்ஸ் 17ஓட்டங்களும், மோர்கல் 15 ஓட்டங்களும் சேர்க்க, பெங்களூர் அணி 8 விக்கெட் இழப்பிற்கு 20 ஓவர் முடிவில் 124 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து 125 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன்விளையாடிய பஞ்சாப் அணி 18.5 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு தனது வெற்றி இலக்கினை அடைந்தது.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக பஞ்சாப் அணியின் சந்தீர் சர்மா தெரிவானார். பஞ்சாப் அணி இதுவரை விளையாடிய 5 போட்டிகளிலும் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.(க)

## இன்றைய போட்டி




இடம்: டுபாய் நேரம் 8 pm

# மேலதிக அரச அதிபர் திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆர்.சரஸ்வதி ஆகியோர் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபையிலுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள் இருவரையும் விடுவித்ததாக மத்திய அரசு அறிவித்துள்ள போதும் மாகாணசபையில் குறித்த இரண்டு மேலதிக அரசாங்க அதிபர்களின் கல்வித் தகைமைக்குரிய பதவிநிலை வெற்றிடமாக இல்லை என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில் மேலதிக அரசாங்க அதிபர்கள் இருவரினதும் திடீர் இடமாற்றம் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.(எ-6)

# ஜனாதிபதி கேட்டதன்...

வர் சிறில் ராமபோசா.

இலங்கை விவகாரத்தைக் கையாளும் பொறுப்பை ஏற்ற பின்னர் அது தொடர்பாக வெளிப்படையாக அவர் செய்தி வெளியிட்டுக் கருத்துக் கூறியமை இதுவே முதல் தடவையாகும்.

புதிய அரச முறைமை ஒன்றைக் கட்டியெழுப்புவதில் தென்னாபிரிக்காவின் மீளெழுச்சி பல நாடுகளை எம் பக்கம் திருப்ப வைத்திருக்கிறது.

ஜனநாயக விழுமியங்களைப்பேணி, மனித உரிமைகளை மதிக்கும் எமது போக்கினால் மேலும் மதிக்கப்படுகின்றோம். அதனால் இலங்கை உட்பட பல நாடுகள் எம்மை மதித்து நோக்கத் தொடங்கியுள்ளன.

கடந்த வருடம் பொதுநலவாய நாடுகளின தலைவர்கள் மாநாட்டிற்கு எமது ஜனாதிபதி ஜேக்கப் சூமா இலங்கை சென்றிருந்த போது, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ "ஜனாதிபதி சூமா அவர்களே! இலங்கையில் எமது மக்கள் மத்தியில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத் துவதற்கு உதவ மாட்டீர்களா?" - என்று அவரிடம் வினாவினார். (எ-11)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கனகசபை
காலிங்கராஜா
(சின்னமணி)

மண்மகிழ
20.01.1933

விண்தழுவ
10.05.2013

பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய், அன்புக்கு
இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் குலவிளக்கே! எம் வாழ்வில்
ஒளி விளக்கேற்றியவரே!
ஓராண்டு கடந்தும் உம் பசுமை
நினைவுகள் எம் மனதில் எப்போதும்.

எம்வாழ்வில் என்றும் உங்கள் துணை
தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இணுவில் தெற்கு. (6256) - குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

## Dr.கந்தப்பு நடராசா



வட்டுக்கோட்டை மூளாய் வீதியை பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.கந்தப்பு நடராசா நேற்று (28.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னரத்தினதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் நகுலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை, தர்மரட்ணம் வள்ளிநாயகி மற்றும் துரைராசா, பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரரும், உதயகுமார் (CEO, HTN Informa ption System), ரவிக்குமார் (பொது முகாமையாளர் PPDP Pvt.Ltd), Dr.ஜெயக்குமார் (வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை), அஜந்தா (கனடா), ஜெயந்தா (உள்ளூராட்சி உதவியாளர் ஆளுநர் செயலகம் வடமாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சினி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), Dr.மாலினி (RMO, மத்திய மருந்தகம் ஹாலி எல), சரளா (ஆசிரியர் சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம், பாஸ்கரன் (கனடா), சோமராஜ் (நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் Oxfam), ஆகியோரின் மாமனாரும், நிதூசன், அபிநயா, விதூசன், பானுகா, ஜோசிகா, கீர்த்திகன், கம்சிகா, கருனிகா, பிரவீனா, பிரதூஷா, பிரதீஸ், நிலோத்தமன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.05.2014 (வியாழக்கிழமை) மு.ப. 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'துவாரகா'
மூளாய் வீதி, மூளாய். (6257)

தகவல் :- குடும்பத்தினர்
தொ.பே :- 021 225 0329


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளுக்கு எதிராக...

வெளியிட்டுள்ளார்.

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது, அங்கு புதிய அரசு பதவியேற்க இன்னும் ஒரு சில வாரங்களே இருக்கின்றன. இந்நிலையில் இந்தியாவின் புதிய படைத்தளபதியை நியமிக்கும் முடிவை காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி அரசினால் எடுக்க முடியாது என்று பாரதிய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தியாவின் புதிய படைத் தளபதியாக நியமிக்கப்படவுள்ள லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுகக் பதவி உயர்வு பெறுவதற்கு முன்னர் படைத்தளபதியாக இருந்த ஜெனரல் வி.கே.சிங் ஒழுக்காற்று விதிகளின் கீழ் தடைவிதித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கை மற்றும் காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கிய லெப்.ஜெனரல் தல்பீர் சிங் சுகக்தின் நியமனத்தில் சர்ச்சைகள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## யாழ். மாநகரசபை...

தருநருக்கும் விசுவாசமாக இருக்க வேண்டும். அத்துடன் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

நேர்மையான, நடைமுறைச் சாத்தியமான அரசியலை நான் பின்பற்றிக் கொண்டு வருகின்றேன்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நானும் ஒரு வகையில் காரணம். ஒரு காலகட்டத்தில் ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டவன் என்ற காரணத்தினால் மக்களின் கருத்துக்களுடன் சேர்ந்து போவதற்கு இணங்கி வருகின்றேன்.

இன்று வழங்கப்படும் நியமனங்கள் எவரின் அழுத்தத்தினாலும் வழங்கப்படவில்லை என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இன்றைய நிகழ்விற்கு வருகை தர தவறிவிட்டவர்களுக்கான நியமன கடிதங்கள் விரைவில் வழங்கப்படுமென்றும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (எ-11)

## யாழ்ப்பாணத்தில்...

அமைச்சரவையில் முன்வைத்திருந்தார்.

இந்நிலையில், இந்த திட்டத்துக்கான அனுமதியை அமைச்சரவை கடந்த வாரம் வழங்கியுள்ளது.

அத்துடன், இந்த விடுதியை அமைப்பதற்குத் தேவையான காணியை சுவீகரிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வட மாகாணத்துக்குப் பயணம் செய்வோர் தங்குவதற்கு வசதியாகவே இந்த விடுதி அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## அமைச்சர் பஸில்...

யினையாற்றியிருந்தார்.

அவர் தனது உரையில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வடக்கு மாகாணசபை முதலமைச்சரை சந்தித்து பேச வேண்டும் என்ற விருப்பத்தில் உள்ளதாகவும் அதற்கான அனுமதியை கோரிய போது முதலமைச்சர் மறுத்துவிட்டதாகவும் பத்திரிகைச் செய்திகள் ஊடாக அறிந்து கொண்டேன். இந்நிலையில் இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கையாகவிடுவது என்னவென்றால் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடவேண்டும் என்பதே.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடன் முதலமைச்சர் நேரடித்தொடர்புகளைப் பேணினால் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான நிதியினை அதிகளவில் பெற்றுக்கொள்ளமுடியும். எனவே அமைச்சர் பஸிலுடனான சந்திப்பில் முதலமைச்சர் ஈடுபடவேண்டும் என்று கூறினார்.

இதேவேளை வெளிநாடுகளிடமிருந்து இலகு கடன் அடிப்படையில் நிதிபெற்றே அரசாங்கம் அபிவிருத்திப்பணிகளை மேற்கொண்டு வருகின்றது எனவும் நாட்டை அடைவு வைக்கும் விடயம் அது எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் எதிர்க்கட்சித்தலைவரின் உரைக்கு பதிலளித்த முதலமைச்சர் கூறுகையில், உடைந்து விழும் நிலையிலுள்ள நாற்காலியில் (நாற்காலியின் கால்களை உடைத்துவிட்டு அதற்குப்பதிலாக தடிகளை பொருத்திவிட்டு) உட்காருமாறு கூறினால் நாம் எவ்வாறு அதில் உட்கார முடியும்?.

சட்டத்தின் பிரகாரம் உள்ள அதிகாரங்களையாவது தாருங்கள் என்று கூறினோம் ஆனால் தரவில்லை, போர்க்காலத்தில் வடக்கை ஆளுகை செய்தவர் ஆளுநராகயிருப்பதை தவிர்த்து, அவரை நீக்கிவிட்டு சிவில் சமூகம் சார்ந்த ஒருவரை நியமிக்கும்படி ஜனாதிபதியிடம் கோரினோம். அப்போது சரி என்று கூறியவர் பின்பு நொண்டிச் சாட்டுக்களைத் தெரிவித்து அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

வடக்கில் வாழும் தமிழ்மக்களை வருத்தி, முன்னேறவிடாமல் தடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது. அதேவேளை வடக்கு மாகாண மக்களுக்கு நாம் எவ்வளவோ அபிவிருத்திகளைச் செய்தோம் ஆனால் தேர்தலில் மக்கள் எங்களைப் புறக்கணித்து, ஏமாற்றி விட்டனர் என்பதற்காக மாகாணசபையை இயங்க விடமாட்டோம் என்று அரச தரப்பினர் கூறியதாக அறிந்து கொண்டேன்.

இப்படி நிலைமையிருக்கையில் மத்திய அரசிடம் உதவிகளைக்கோரும்படி எதிர்க்கட்சித்தலைவர் கூறியது பரிதாபத்தை ஏற்படுத்தியுள்ளது என்று முதலமைச்சர் பதிலளித்தார். (எ-6)

## தேசிய கீதம்...

முடியும்.

குறிப்பாக விசேடமாக தற்போது வடக்கு மாகாணத்தில் இதனை அமுல்படுத்துவதற்கு சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கமுடியும் என்றார். (எ-4)

## பயங்கரவாதத்...

சட்டத்தினால் அடக்கியொடுக்கப்படு வருகின்றனர் என பிரேரணையினை முன்மொழிந்த சிவமோகன் சாடியிருந்தார்.

இதேவேளை குறித்த சட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது. அதனை இரத்து செய்யும் அதிகாரம் மத்திய அரசிற்கே உள்ளது.

பாராளுமன்றில் பல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்கள் இது தொடர்பில் நாடாளுமன்றில் விவாதிக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா சுட்டிக் காட்டியிருந்தார்.

இதற்கு பதிலளித்த மாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

நாம் மக்கள் பிரதிநிதிகள். ஆகவே மக்களிற்கு இழைக்கப்படும் அநீதியினை நிறுத்து மாறு மத்திய அரசிடம் கோரும் உரிமை எமக்கு உண்டு.

மத்திய அரசிடம் மட்டுமல்ல; அனைத்து நாட்டு தூதரகங்களையும் கோருகின்றோம் என்றார். (எ-4-06)

## நெடியவன்...

இந்நிலையில், நெடியவனை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கையில் நோர்வே பாதுகாப்பு தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் இலங்கை பாதுகாப்பு தரப்பினரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் அச்செய்திகள் குறிப்பிடுகின்றன.

சர்வதேச பொலிஸாரான இன்டர்போலினால் வெளியிடப்பட்ட சிவப்பு அறிவித்தலை அடுத்து, நோர்வேயில் நெடியவன் அடிக்கடி சென்றுவரும் இடங்கள் பாதுகாப்பு தரப்பினரால் சோதனையிடப்பட்டுள்ளன. இருப்பினும், அவர் அங்கிருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார் என நோர்வே தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நோர்வேயின் அனைத்து விமான நிலையங்கள் உள்ளிட்ட நாட்டை விட்டு வெளியேறும் இடங்கள் அனைத்திலும் நெடியவனைத் தேடி பாதுகாப்பு தரப்பினர் வலைவிரித்துள்ளதாக மேற்படி செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


திருமுருகன் கொம் நெற்

மிகக் குறைந்த கட்டணத்தில் 220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான

துரித தபால்கள், பொதிகள் சேவை

அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
3 -5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

* அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்.
* கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை.

WESTERN UNION | MMBL Money Master

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள



இல. 271 A. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். [ஆஸ் சிலோனிற்கு முன்பாக]
தொ.பே: 021 222 7835
(C-7206)

பிரதான கிளைகள் :
இல. 18,பிரதான வீதி நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
பிரதான வீதி, சங்கானை.
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.



காணவில்லை

வரணி ஜெற்றாலையைச் சேர்ந்த **கணபதிப்பிள்ளை குஞ்சுப்பிள்ளை** (6 அடி உயரம், தலைமுடி வெள்ளை) என்பவரை சனிக்கிழமை மாலையில் இருந்து காணவில்லை.

இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
0212050818
0770416168
(6255)





Vacancy in Jaffna

எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தரதொழில். சர்வதேச முன்னணி நிறுவனத்தின் New Office 4 இற்கு 18 வயதுக்கு மேற்பட்ட O/L தோற்றிய 30 பேர் வீதம் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:- பயிற்சி, தங்குமிட வசதிகள் இலவசம்.
பயிற்சியின் போது 12,000/= பின் 35,000/= +
(சி-7209)

அழைக்கவும்:- 0777981471, 0775566226



யாழ்.நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன்
Diploma in Mass Media (அறிவிப்பாளர் பயிற்சி)

வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா?

இதோ... காலம் : 3 மாதம்
Full Time / Part Time Course

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பர தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. (பயிற்சி நிறைவுசெய்யும் மாணவர்களுக்கு 5 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்!

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச / தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்.
(C-7204)

அனைத்து வகுப்புக்களும் இம் மாதம் ஆரம்பம் 03/05/2014

தயாராகுங்கள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக ஊடக வியலாளராக வேண்டுமா?

BTEC BRITISH TECHNOLOGY & ENGLISH COLLEGE

#21, Sirampiyadi Lane, Jaffna. Tel : 0217904468, Mob :0777929475, 0766976662

பதிவுகளுக்கு விரையுங்கள்....!



கோழிக்குஞ்சு விற்பனை

தென்பகுதியில் அரச திட்டங்களின் விநியோகஸ்தரான Lanka Farm இன் கோழிக் குஞ்சுகள் தற்போது யாழ்ப்பாணத்திலும்.
கோழிக்குஞ்சு - 75/- (கிரிராஜ்)
வாத்து - 165
(6254)
தொடர்பு : 0777531344, 0774669669



கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

அழையுங்கள் 0779086737

GUNAA BEST PC Computer Repair
52,Hospital Road,Jaffna.
(C-7207)



அக்ஷய திருதியை நன்நாளில் தங்க நகைகளை வாங்கிட ராசியான தங்க மாளிகைக்கு வாரீர் வாரீர்



யாரேனும் சங்கானையில் நகை வாங்க வந்தால் பாரெங்கும் அவர்கள் நாவில் பேசப்படுவது

ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

வியாழக்கிழமை (01-05-2014) அன்று அக்ஷய திருதியை தினத்தை முன்னிட்டு விசேட கழிவுகளுடன் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்



K.T. பிளாசா, பிரதான வீதி, சங்கானை. தொ.பே: 021 321 2399

குறிப்பு: தங்கநகை வாங்குபவர்களுக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும்.
தங்க நகை ஓடர் தருபவர்களுக்கு தங்க நாணயப் பரிசில்கள் வழங்கப்படும்.
(C-7208)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.